திருச்சிற்றம்பலம்

# சிவபஜனாக்கீர்த்தனைகள்

இத்துடன்

பிரசன்னபாரிஜாதக்கீர்த்தனைகளும், நடுவெழுத்தலங்கார

முதலிய அற்புத தனிப்பாடல்களும், விடுகதைக்கவிகளும்

அடங்கியிருக்கின்றன.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

ம-ள-ள-ஸ்ரீ,

கன்னப்பகவுண்டரவர்கள் குமாரர்

திருமலைசக்கப்பகவுண்டரவர்கள்

இயற்றியது.

சிவஸ்ரீசமஸ்தானம் வித்வான்

ம-ள-ள-ஸ்ரீ, கனம்

திருமலைக்கொழுந்துப்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

பல கனதனவான்களின் பொருளுதவியாலும்

[illegible]

முயற்சியாலும்,

ம-ள-ஸ்ரீ, பு. மே. சபாபதி முதலியாரவர்கள்

சென்னை சந்திரிகா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1903.

இதன் விலை

ஸ்ரீ சு. சுப்பிரமண்ய ஐயர், B.A.
அவர்களின்
அன்பளிப்பு

சிவமயம்:

# சாத்துக்கவிகள்.

---

சென்னமனூரைச்சார்ந்த பூலானந்தபுரம் கிராம முன்சீபும் சைவ
சித்தாந்த நிஷ்டாநுபூதி வாய்ந்தவருமாகிய மஹா-ா-ா-ஸ்ரீ
சனம் து. அண்ணாமலைப் பிள்ளையவர்கள்
இயற்றியது.

---

பரவைபுடைசூழவனி - மிசைநளினைவளருமொரு
    பதியாதெனத்துருவியே
பார்தனினியமறையோர்கள் - வேள்விபுரிமனைகளும
    பான்மொழிநிலாமுகத்தர்
குரவைபயில்வீதிகளு - மேலமொடுபணமணங்
    குலவுமாடங்களுஞ்சேர்
கோம்பைநகரேயெனத் - தேர்ந்தமாலவ்விடங்
    குறுகுவேமாகிலங்க
வரவினதுபணவல்கு - லாயிழையைமருவலா
    மதுங்கைக்குரியவூரோ
யாகவெனவந்தினிது - வாழுமந்நகரதனி
    லதிகநலனுறவாழுவோன்
கரவிலாநெஞ்சினன் - திருமலைசக்கயக்
    கவிவாணனரனதன்பன்
கழறசிவகீர்த்தனம - துலகுய்யுநாலெனாக்
    கற்றோருரைப்பர்மாதோ.

---

எரசக்கநாயகனூர் ஜமீனைச்சார்ந்த மல்லிங்கபுரம் ம-ா-ா-ஸ்ரீ
பொன்னம்பலக் கவிராயரவர்களியற்றியது.

---

கடி ..முத்தமிழிலெத்தமிழுந் தேர்ந்துசொலுந்தமிழ்ப்புலவீர் மொழியக்கேளீர்
படி ..உத்தமியம்பிகைகணவன் றனையனுளமகிழ்ந்துகதி யுதவவேண்டி
..நத்தமிகுசிவபஜனை திருமலைசக்கயக்கவிஞன் சொற்றனிந்தச்

சிவகிரி சமஸ்தானம் மஹா வித்வான் ம-ள-ள-ஸ்ரீ
ச. திருமலைவேற் கவிராயரவர்கள்
இயற்றியது.

---

விரும்புருவம்பெறுமதனன் - கோம்பைவளம்பதிவாசன்வேந்தாயோற்ற
வரும்புருடதிலகமெனுந் - திருமலைசக்கயதமிழ்ப்பாவல்லோன்சொன்ன
கரும்புருசிகர்மதுரக் - கீர்த்தனமாந்தமிழ்க்குமகாகடினமார்வல்
விரும்புருகுங்கல்லுருகு - மெவர்மனந்தானிதற்குருகாதெண்ணுங்காலே.

பார்க்கயன்கோட்டை ம-ள-ள-ஸ்ரீ, பிச்சையாண்டி ஆசாரியாரவர்கள்
குமாரர் வித்வான் ம-ள-ள-ஸ்ரீ, பழநிச்சாமி யாசாரியாரவர்கள்
இயற்றியது.

---

அந்தணந்தானம்புகழோ - டரியகதியருள்வதெழிலரனார்பாத
வந்தனந்தானெனத்தெளிந்து - மகிழ்கீதத்துதித்தொகுதிவழுத்திறனால்
நந்தனந்தாமரைத்தடஞ்சூழ்-நலந்திகழ்தென்கோம்பையெனும்நகரில்வாழ்வு
கந்தனந்தாமணிகவிஞர் - கண்மணியாந்திருமலைசக்கயவல்லோனே.

புதுப்பட்டி அஷ்டாவதானியவர்கள் குமாரர் ம-ள-ள-
செல்லமுத்து சேர்வையவர்களியற்றியது.

வருமலையாலடியர்குழாம் - வருந்தாமலருள்புரியுமவரதன்வாசந்
தருமலைநேர்குழற்கவுரி - தழுவுசிவன்மீதுகீர்த்தனங்கள்சந்தப்
பெருமலையக்கும்பமுனிக் - கிணையெனப்பற்பலகலையும்பெரிதுணர்ந்த
திருமலைசக்கயதமிழ்ப்பா - வலன்பகர்ந்தான்புகழ்ந்திதனைச்செப்பார்யாரே.

பழனிஸ்தலம். எஸ். எஸ். எஸ் வி. கம்பெனி ஸ்டேஜ் மானேஜர்
ம-ள-ள-ஸ்ரீ, வே. முத்தனாசாரியாரவர்கள்
இயற்றியது.

சகலபுவனாத்மரக்ஷகர்த்தனானசிவ
சம்புமீதன்புகூர்ந்து
தண்டமிழினான்மதுரசகீர்த்தனங்கள்பல
சாற்றிநற்கீர்த்திபெற்றான்

## சாத்துக்கவிகள்.

பகரரியவாகமபுராணேதிகாசவிற்
பனசிரேஷ்டப்ரதாடன்
பத்தியுடனேபஜனைநித்தியஞ்செய்கரன்
பதமலர்துதிக்குநேமன்
திகழ்கிரணசந்திராதித்தர்முறைபிசகினுஞ்
செப்புமொழிதப்பாதவன்
செந்தமிழ்ப்பாவலர்மதிசதிடப்பலகலை
தினமபயிலுநன்றுவிஞன்
மகிமைபெறுகோம்பையம்பதியில்வாழ்கன்னப்ப
வள்ளல்மாதவகுமாரன்
மதியூகெம்பீர திருமலைச்சக்கய
மகாவிரவதிடரதனமே.

---

கோம்பை - மகா - ள - ள - ஸ்ரீ, துரைப்பாண்டியரவர்கள் குமாரர்,
சின்னச்சாமியவர்களியற்றியது.

---

அருமறையினுட்பொருளாம சிவபிரானருட்கடல்நீரதனைமொண்டு
திருமலைசக்கயனெனுங்கார் பொழிசிவகீர்த்தனமழையின்செழுமையாலே
வருமகிலத்தஞ்ஞான மெனுங்கோடைநீங்கியிமைமறுமையின்பம்
தருமரியசிவபத்தி யெனும்பயிர்களுலகெங்குந்தழைக்குமன்றே.

---

அம்மாபட்டி ம-ள-ள-ஸ்ரீ, எஸ் எஸ் சுருளியாண்டிக் கவுண்டரவர்களியற்றியது.

---

பார்த்தனங்கமிசைமோதப் - பாசுபதம்பரிந்தளித்துப்பனைக்கையாத்தோல்
போர்த்தனங்களுகமதன் - றனைத்தீய்த்தனபருக்கருளைபுரிந்துகாக்கும்
கீர்த்தனக்கமணியரன்மேற் - றிருமலைசக்கயனன்பாற்செப்பிடுஞ்சங்
கீர்த்தனங்கட்குருகியன்றோ - வல்விரும்புக்கயமெனுமபோகிடைத்ததாமே

---

கோம்பை ம-ள-ள-ஸ்ரீ, வி. பரமசிவ உபாத்தியாயரவர்களியற்றியது.

---

கடிபொழில்சூழ்கோம்பைநகர் - கன்னப்பன்றவத்துதித்தகல்விமிக்கோன்
படிபுகழுந்திருமலைசக் - கயகமகனுள்ளன்பாற்பத்தியுற்றே
படிமுடியுநடுவுமிலாப் - பரன்மேற்சொல்கீர்த்தனமாமழுதையுண்டோர்
மிடிமைதுயர்பவமகற்றி - யெக்காலும்பேரின்பமேவுவாரே.

கோம்பை ம-ா-ா-ஸ்ரீ, தி. ர. திருமலைசுப்பு செட்டியாரவர்க
ளியற்றியது.

---

பார்த்திபர்போற்றுங்கோம்பை - நகர்வாழ்கன்னப்பவிற்பன்னனீன்ற
சீர்த்திமிகுதிருமலைசக் - கயக்கவிஞன்றனிமுதலாம்சிவத்தின்மீதும்
கார்த்திகேயன்மீதும் - பகர்சங்கீதங்கள்பவக்கடல்கடத்தும்
பூர்த்தியாம்வங்கமதாம் - அகவிருட்கோர்தீபமென்றும்புகலலாமே.

---

திருமயிலை - வித்வான் சண்முகம் பிள்ளை யவர்கள் மாணாக்கர்
ம-ா-ா-ஸ்ரீ கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்பாடியது.

---

பார்த்தனையன்றெதிரிட்டுவலிந்தாண்டுபாசுபதமபரிவினீந்த
தீர்த்தனைநெஞ்சுவப்புறக்குமினியநெறியிசையென்னத்தெளிவிஞேர்ந்து
கீர்த்தனைதந்தான்கோம்பைத்திருமலைசக்கயக்கவிஞன்கேடிலன்பு
வார்த்தனையபத்தியுடன்நவரசமும்வளம்பலவுமன்னமாதோ

---

இந்நூலைச்சரிபார்த்துக்கொடுத்த கனம். ச. திருமலைவேற்
கவிராயரவர்கள்மீது இந்நூலாசிரியரியற்றியது.

---

ஆர்த்தனமாதிரைகுலவமலிதடஞ் சூ
  ழணிதிகழ்மல்லிங்கநகர்தனில்வாழ்நேமன்
வார்த்தனமாதிரமருப்பின்வயங்குவாணி
  வண்சுரும்பரிசைபயில்செங்கமலமேவுஞ்
சீர்த்தனமாதிருவரைத்திண்புயநாவேற்ற
  திருமலைவேற்கவிவலவன்சிவன்மீதியான்சொல்
கீர்த்தனமாதிகளைக்கண்பார்த்துநல்கிக்
  கிரீசனருளொடுபடைத்தான்கீர்த்திமாதோ.

**சாத்துக்கவிகள்.**

**சம்பூரணம்**

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

## இந்நூலையச்சிடுதற்குப் பொருளுதவிசெய்த கனவான்களின் பெயர்வழி ஜாப்தா.

---

| | | | | |
|---|---|---|---|---|
| ம-ா-ா-ஸ்ரீ. | | | ரூ. | |
| ,, | அப்பாஜிகுள்ளப்பகவுண்டரவர்கள் ஜமீன்தார் | கோம்பை | 10 | 0 |
| ,, | வி. சிவசுப்பிரமணியஐயரவர்கள் | ,, | 4 | 0 |
| ,, | து. சின்னச்சாமியவர்கள் | ,, | 4 | 0 |
| ,, | தி. ரங்கயன்செட்டியாரவர்கள் | ,, | 4 | 0 |
| ,, | சைவவைதிகாநுபவ முத்துநாகம்மாளவர்கள் | கூடலூர் | 2 | 0 |
| ,, | எஸ். பழநிவேற்பிள்ளையவர்கள் கர்ணம் | ,, | 2 | 0 |
| ,, | சி. அருணாசலம்பிள்ளையவர்கள் பெர்மிட்குமஸ்தா | ,, | 2 | 0 |
| ,, | வை. ஸ்ரீராமன்செட்டியாரவர்கள் | கோம்பை | 2 | 0 |
| ,, | ர. ரங்கயன்செட்டியாரவர்கள் | ,, | 2 | 0 |
| ,, | சே. குருநாதன்செட்டியாரவர்கள் | , | 2 | 0 |
| ,, | பால. சுப்பயன்செட்டியாரவர்கள் | ,, | 2 | 0 |
| ,, | க. வே. திருமலையன்செட்டியாரவர்கள் | ,, | 2 | 0 |
| ,, | சொ. சின்னப்பன்செட்டியாரவர்கள் | ஷை | 2 | 0 |
| ,, | ந. ல. நல்லதம்பிசெட்டியாரவர்கள் | கோம்பை | 2 | 0 |
| ,, | எஸ். சுருளியாண்டிக்கவுண்டரவர்கள் | அம்மாபட்டி | 2 | 0 |
| ,, | ந. நல்லயன்பெருமாள்பிள்ளையவர்கள் | கோம்பை | 2 | 0 |
| ,, | வே. சுப்பிரமணியன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 8 |
| ,, | பெ. பாலயன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | வா. சுப்பயன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | ர. சு. வாலகுருநாதன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | ர. வாலவாசுசெட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | பெ. சு. வாலகுருநாதன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | கு. வாலகுருநாதன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | ஆ. கலுவன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | நா. வெள்ளையன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | பி. திருமலைசுப்புசெட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | மு. அ. முத்துவீரன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | மு. சண்முகம்சேர்வைகாரரவர்கள் | , | 1 | 0 |
| ,, | ரா. சே. குருநாதன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | மு. முத்திருளப்பபிள்ளையவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | கெ. கதிர்வேல்ஜோக்கியவர்கள் | சிலோன் | 1 | 0 |
| ,, | உ. ம. சே. முகியித்தீன்பிள்ளைராவுத்தரவர்கள் | கோம்பை | 3 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | தி. நல்லதமபிசெட்டியாரவாகள் | கோம்பை | 1 | 0 |
| ,, | கு. சிருத்தப்பகவுண்டரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | தி. ராமசாமிக்கவுண்டரவர்கள் | பண்ணைப்புரம் | 1 | 0 |
| ,, | தி. ரா. ரங்கசாமிஆசாரியாரவர்கள் | கோம்பை | 1 | 0 |
| ,, | சு. லெக்கயஞசாரியாரவர்கள் | கூடலூா | 1 | 0 |
| ,, | க. லெக்ஷயஞசாரியாரவாகள | கோம்பை | 1 | 0 |
| ,, | வெளியப்பஞசாரியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | பாலுகிருஷணன்செட்டியாரவர்கள் | ,, | 1 | 0 |
| ,, | R. ஆறுமுகமேஸ்திரி | ,, | 1 | 0 |

---

## வாழ்த்து கவி.

நச்சிட்டவன்பர்க்கே நலமெலாமீந்தருளி நாளுமோம்பு
நச்சிட்டகண்டன்மே னவில்பஜனைக்கீாத்தனமுன் ஞமிந்நூலை
அச்சிட்டம்புவியோர்க ளரன்றனையேபஜிததுநல் லருள்பெறச்செய்
அச்சிட்டரிகபரதது மழிவிலாநற்பதவி யடைகுவாரே.

---

சிவயநம :

# சிவபஜனைக் கீர்த்தனைகள்.

## கணேச ஸ்துதி

இராகம் - நாட்டை - ஆதிதாளம்,

பல்லவி.

ஆகுவாகனா கஜானனா - ஆகு

அநுபல்லவி.

கோசனகசரண-ஆகமவிகரண-கோதறுசிவசுதனே. (ஆகு)

சரணங்கள்.

விமலைபாலனே சுசீலனே
கமலதடநயன விமலவடசயன
கவினமாரிமருகா (ஆகு)

இந்த்ரபூஜிதா சுபாஷிதா
சந்த்ரஜடாதர மந்த்ரகடோதர
தவளாம்பரதரனே (ஆகு)

பகர்நன்னீதனே அதீதனே
சகனமுடனுலகு புகழுமயிலிலகு
கடவுள்சகோதரனே (ஆகு)

சுருதியாதியே அநாதியே
மருவுசதுர்ப்புயனே திருமலைசங்கயன்சொல்
வரதா கதிநீயே. (ஆகு)

## சத்குரு வணக்கம்.

2. இராகம் - கீர்வாணி - ஆதிதாளம்.

பல்லவி.

சிவகுருவந்தனமே-செய்-சிவகுருவந்தனமே-ஆ-சிவ

அநுபல்லவி.

சிவகுருவந்தன மேநலமனமே
தவமிதுவே தினமே - ஆ (சிவ)

சிவபஜனைக் கீர்த்தனைகள்.

அருவினைநீக்கும் திருவினையாக்கும்
அருள்விழிநோக்கும் ஸதா - ஆ (சிவ)
நெறியிதல்லாது பெறுவகையாது
நீமறவாது ஸதா - ஆ (சிவ)
திருமலைசக்கயன் சென்னியின்மீது
சேவடிமலர் சூடும் - ஆ (சிவ)

## சரஸ்வதி துதி.

3. இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி

வாணியேயென்னாவில் வந்தருள்வாய் - வாணி

அநுபல்லவி.

கணிபதாய்மிகக் - கருணைபுரிந்தேயென்றும் (வாணி)

சரணங்கள்.

மலரயான்செழுநாவில் - வாழுமற்புததேவி
சீலவுமறிஞர்க் காவி - நீயுகந்தெனைமேவி (வாணி)
அருமைமிகும்நீதாயே - அடிமைநானுன்சேயே
பெருமையுதவிநீயே - பேணியெனையாள்வாயே (வாணி)
தாட்டுணைதிருமலை - சக்கயன்றன்றலை
சூட்டுங்கலாநிலை - சுதந்தரியே கலை (வாணி)

## நூல்.

ராமமகி ப்ரணதபால என்ற மெட்டு.

4. இராகம் - கலியாணி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

தாரகமா ப்ரணவரூப - தாரகமா-சமய விநுத சகள வடிவ (தாரக)

அநுபல்லவி.

சர்வபூத - சர்வபூரண - சர்வாதீதஜளபதும
சரண யுகள பரம குரவ (தாரக)
நந்திதேவ - நந்திவாகன - நந்தீச கணசமுக
நாத கீத வேத போத (தாரக)
திரிநேத்ர - திரிபுராந்தக - திருமலைசக்கய வந்தித
சிமய திலக விமய நிலய (தாரக)

காக்கவேவருவாயே - கருடனேறி - என்ற மெட்டு.

### 5. இராகம் - தன்யாசி - ஆதிதாளம்.

பல்லவி.

சங்கரமகதேவா - அரோஹர
சங்கரமகதேவா.

அநுபல்லவி.

துங்கரவிநயன - சுந்தரவிபுத
பங்கரஹிதசரதா - அரோஹர (சங்கர)

பாலவிலோசன - பதிததயாள
நீலகிரீவபதே - அரோஹர (சங்கர)

அங்கஜமர்த்தன - அனந்தகல்யாண
பங்கஜபதயுகளா - அரோஹர (சங்கர)

சந்ததமதிருமலை - சக்கயன்பணிநாதா
வந்தெனையாண்டருள்வாய் - அரோஹர (சங்கர)

### 6. இராகம் - [illegible]ல் - ஆதிதாளம்.

பல்லவி.

பரமசித்தியானந்தத - தாண்டவராயா
பாலவிலோசன - மாம்பாஹீ

அநுபல்லவி.

சுரகணவிநுத சர்வாதீத
சோமஜடாதர - மாம்பாஹி
சோகநிவாரண கோமளாங்க
சோணகிரீசா - மாம்பாஹீ (பரம)

சீதபராக அம்புஜசரண
தீனதயாளோ - மாம்பாஹீ
சித்தஜநிக்ரக சுஜனபாலன
சின்மயகுரவே - மாம்பாஹீ (பரம)

பர்வதராஜ - புத்ரிமனோகர
பன்னகபூஷண - மாம்பாஹீ
பாஹீதிருமலை சக்கயவந்தித
பஞ்சாக்ஷரவோ - மாமபாஹீ (பரம)

செவி - நேனெட்லசகிம்துனே - என்ற ஜாவளி மெட்டு.

7. இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

உனை - நானென்றும் நம்பினனே - ஜக
நாதா கருணாகரா - உனை - நான்

அநுபல்லவி.

மானார்மலர்க்கையனே-எங்கும-தானாகியமெய்யனே-உயர்
வானோர்பணிதுய்யனே - உனை (நான்)
ஞானசபைவாசனே - தில்லை - வாழு உமைநேசனே - மறை
காணாமருநீசனே உனை (நான்)
உலகிற்பிரகாசிக்கும் - பல - கலைகற்றோராநேசிக்கும் - திரு
மலைசக்கயன் பூசிக்கும் உனை (நான்)
தேன்றுளிக்கும் வண்டுகிண்டும் - என்ற மெட்டு.

8. இராகம் - செங்கலா - ரூபகதாளம்.

பல்லவி.

ஈசனேயடியவ ரிதயமதில்வதியிலகும்
வாசனேயென்னெதிர்வந்துசுகந்தந்தருள்வாய்.

அநுபல்லவி.

டாசம்ரீத்தமெய்த் - தாசருக்கருள்
பாலித்திடுசிவனே திரி சூலப்படையவனே ஜக (ஈசனே)

சரணங்கள்.

மூாதிமூவரினுமுன்னவனேநன்னயமிகு
கீர்த்திசேர்சந்திர சேகரகிரு பாகரனே
பூர்த்தியாய்முகம் பார்த்திடாய்பணி
பூண்டவனே-தாண்டவனே-காண்டிபனே-யாண்ட-ஜக (ஈசனே)
சிந்தையாகியபல நெறியதனால் வெறிகொளுமென்
சிந்தையாகுலமது தீர்ந்திடமகிழ் கூர்ந்திடுவாய்
தந்தைதாய்குருவிந்தைசேர்தெய்வம்
சகலமுநீயல்லாதொரு புகலுளதோசொல்லாய் ஜக
காலகாலஜகத் காரணபரிபூரணனே
பாலலோசனபொற் பாதாசபை நாதா திகழ்
நீலகண்டக பாலருத்திர
லீலைபெற்றிடநாளும திருமலைசக்கய னோதும் ஜ (ஈசனே)

மாதரை நினையாதே என்ற மெட்டு.

9. இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

நாதனைமறவாதே - வேத நாதனை மறவாதே.

அநுபல்லவி.

ஆதரைமிசைபர - மாதரைத் தினமே
அன்புடன்விரும்பியே - யலைந்திடு மனமே (நாதனை)

சரணங்கள்.

காதகருறவாற் கயல்விழி வேசி
காந்தனைத் திரிந்து நீ கடியபொய் பேசி
பாதகனாகாமற் - பழி வழி கூசி
பவங்களையறவோட்டி - பதிதரும் காசி (நாதனை)
என்றும் சைவசமய மார்க்கத்தை நாடு
இசையுடனேசிவ பஜனையைப் பாடு
சென்று சிவனடியா ருடனுற வாடு
சிவசிவவெனுமந்திரம் - செப்பியன் போடு (நாதனை)
அருமறைமுடிவினு மவனல தில்லை
அண்டர்கோனிவன்கீர்த்திக் குண்டோமேவா ரெல்லை
திருமலைசக்கயன்சொல்திகம்பரன் றெல்லைக்
தீவினையடங்கலும் - தீர்ததருள் தில்லை (நாதனை)

---

சிவசிதம்பரத தாண்டவராயா - என்ற மெட்டு.

10. இராகம் சங்கராபரணம் - ரூபகதாளம்.

பல்லவி.

கனகசபையிலாடிய தேவா - கதி - யளித்திடும்தில்லைக
கனகசபையிலாடியதேவா - ஒற்றைக்
காலைத்தூக்கிப்பரிபுரம் - கலகலவென் றுலவிட
கனகசபையிலாடிய தேவா - உக்ர - காளிநாண பரதர்கள்
காதல்பூண அடியவா - கண்டுமிஞ்சியவுவகை
கொண்டுநெஞ்சகமுருக - கனகசபையிலாடியதேவா.

அநுபல்லவி.

பனகபூஷணம்கையிற்றரித்து - பலமலர்த்தொடையுரத்திற்பரித்து
பனிமதிச்சடைதிகழவிரித்து - பரவசமாக
தரிகுகுதரிகுகுஜெம்தரிதிலலானதொம்தரிகிட
தகணகதகணகஜெம் - தகணகதகணகஜெம
ததிம்திமித - ததிம்திமித - ததிங்கணததம்தாமெனவே (கன)

### சரணங்கள்.

கொலைமுதலாம்பாவமைந்தும - குடிகொள்நெஞ்சவஞ்சகருடன்
கூடியேயபிழையியற்றிமமதை - கொண்டுமே மருளாய்
வலையிலேபுகுமானெனநான்-மயங்கிடாமலித்ததியிலென்முன்
வந்தடியேன்கதிபெறும்படி - மலரடி யருளாய்
அலைகடலுலகினிலுன்றனை - யல்லாலேதுங்கதியிலை
அகமிகமகிழ்பெறவும் - இகபரசுகமுறவும்
அனந்தமொடு - ஜகம்புகழ - அனமுந்தனமுந்தந்தருள் (கனக)
மறுவறுமாதவமோன - மலரவிதமெய்ஞ்ஞானபூரண
மகிமைபெறுசின்னடியாருடன் - வாழவே கூட்டி
அறுபகையிலொன்றாகு - மரிவையர்தம்மோகபாச
அந்தகாரந்தனிற்புகாமல்சின் - னருளொளி காட்டி
குறுகியபிணிமிடிபென்றன்று - னில்லாதோடவுமிசைபுகழ்
குவலயமதிலிலக - கலைகளெலாம்விலகக்
குறித்தவரமளித்தடிமை - கொண்டெனையாள்வாயநாரா (கனக)
அருமறைதேர்நான்முகனு - மம்புயமேலாசனமாலும்
அலைந்துதேடியுங்காணவொண்ணு - அடி முடியோனே
மருவுசராசரமீன்ற - மாதாவோர்பாகனே திரு
மலைசக்கயன்றனிதயாசனம் - வளர் நெடியோனே
பொருவருநெடுவடகுன்றெழில் - வில்லாயோர் செங்கையிலுற
புரநனியெரிபடவும் - சுரர்பயமதுவிடவும்
புரிந்துபலியிரந்தவனே - புலியும்பணியும்பணிய (கனக)

11. இராகம் - முகாரி - அடதாளம்.

பல்லவி.

வேண்டுவதெது நெஞ்சமே - யுனக்கு
வேண்டாதெது நெஞ்சமே

அநுபல்லவி.

ஆண்டுநமை ரக்ஷிக்கும் - தில்லைநடராஜர்
அருட்பார்வையே வேண்டுமா - அல்லால்
மாண்டுமடியுமட்டும் - சஞ்சலம் தருமாதர்
மருட்பார்வையே வெண்டுமா - நீ (வேண்டு)
சித்தமுமைபங்கர் - பாதத்திலர்ச்சித்து
சிரப்பமலர்கள் வேண்டுமா அல்லால்
பத்தஞ்சற்றுமில்லாத - வேசையர் பங்கையில்
பரப்பமலர்கள் வேண்டுமா - நீ (வேண்டுவ)

திருநாள்பூசை தவம் - செய்புமடியர்துன்பம்
சிதைக்கும்பாதமே வேண்டுமா - கேட்ட
தொருநாள்கொடா விட்டாற் - போடாவென்றேயெட்டி
உதைக்கும்பாதமே வேண்டுமா - நீ (வேண்டுவ)

ஆதிபகவனடி - தாழும் சற்ஜனர் வாழுய
அந்தவீடே வேண்டுமா - அல்லால்
சூதினுற்காமுகர் - குடிகெடுக்கும வேசையர்
சொந்தவீடே வேண்டுமா - நீ (வேண்டுவ)

அன்பன் திருமலைசக் - கயன் துதிசெய்திடும்
அச்சிற்றம்பலம் வேண்டுமா - அல்லால்
இன்பம் போலவேகன - துன்பம் செய்விலைமாதர்
எச்சிற்றம்பலம் வேண்டுமா - நீ (வேண்டுவ)

வையாபுரிமுருகையனே என்ற மெட்டு

12. இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி

நித்தியானந்த பூரணனே - நின்மலபராம்பரனே

அநுபல்லவி.

அத்தியுரிபோர்த்த - சத்திமணாளனின்
பத்தியே தந்தருள்வாய் (நித்தி)

சரணங்கள்.

வில்வவன நாதனே - விண்ணோர் பணிபாதனே
வல்வினைகள் நீங்க - செல்வம் வளர்ந்தோங்க
நல்வரமே யருள்வாய் (நித்தி)

கன்னல் மொழிசேருமை - காதலனே யடிமை
இன்னலறநீக்கி - நன்னயமாயாள்வாய்
பன்னகபூஷணனே (நித்தி)

கல்லை நிகரென்னெஞ்சம - கரையவருள்நீ தஞ்சம்
தில்லைநடேசாவென் - தொல்லைவினைதீர
இல்லையே யென்ன செய்வேன் (நித்தி)

சேவடி சென்னிபுனை - திருமலைசக்கயனை
பூவுலகின்மீது - காவல் செய்தாள் ஸர்வ
ஜீவதயாபரனே (நித்தி)

13. இராகம் தன்யாசி - ஆதிதாளம்.

பல்லவி.

சம்புசிவ சந்த்ரசேகரா - உயர்
தற்பரனே - நற்கயிலை - வெற்பிலுறையற்புதனே
தாணுவேகிருபாசாகரா

அநுபல்லவி

அம்புஜமலர்ப்பாதனே - நம்புமெளியார்கள்தமை
அனவரத மருள்செய் - கனவரதனேயெழில் (சம்பு)

சரணங்கள்.

இன்னமென்மே லென்ன வன்மமோ - உனை
இரவும்பகலு மன்பாய்ப் - பரவி மிகவுருகும்
ஏழையேன் செய்பூர்வ கன்மமோ
பன்னகாபரணா செழுங் - கன்னல்மொழியுமைபாகா
பக்ஷமுடனே யெனை நீ - ரக்ஷியிநுவேஸமயம் (சம்பு)

கன்மபரிபாகா உனையே - தினம்
கருத்தினி - லிருத்தினேன் - வருத்தம - தகற்றியே
காத்தருள் புரிவா யெனையே
சின்மயபஞ்சாக்ஷரனே - நின்மலபரிபூரணா
சித்தரொடு - முத்தர்பணி - வித்தனே மகத்வமிகு (சம்பு)

அருமறைபணி தூய்யனே - நாளும்
அண்டர் பரவும் பரனே - தொண்டர்தமை யன்பினொடு
அடுத்துவந்தாளு மெய்யனே
சருவபூதகாரணா - திருமலைசக்கயனே
சந்ததங்காத்தருள் சோம - சுந்தரதயாபரனே (சம்பு)

---

இதுசமயமையா - வைவேல் - என்ற மெட்டு.

14. இராகம் கீர்வாணி - ஆதிதாளம்.

பல்லவி.

விமலதாரணனே - வேதபூரணனே.

அநுபல்லவி

நிமலகருணாகர - நிகிலகாரணனே (விமல)

சரணங்கள்.

திருவளரரு ணேச - சீதசசி சேகர
அருணகோடி பிரகாச - அரஹரபுர ஹர (விமல)

பணபூஷணகர பரமபதாவ ணக
கனகமய தர கஜமுக சுஜ னக
அருமறை தினமுவர் - தறையுமாதிபகவ
திருமலைசக்கயவர் - திததுவ பத சிவ (விமல)

ராமநாமஞ்செய் ஜென்ம - சாபல்யம் - என்ற மெட்டு.

15. இராகம் காபி - அட தாளம்.

பல்லவி.

பங்கஜமாமலர்ப் - பதந்தரவாவா - சிதம்பரதேவா

அநுபல்லவி.

சங்கரகிரிதர - எங்கும்ப்ர காசா
சாட்குண்யகருணைவிலாசா - கலாகச பேசா (பங்கஜ)
நிரந்தர மடியரைப் - புரந்தருள் நீதா
நித்யானந்த ஜகநாதா - சிவஞான போதா (பங்கஜ)
உணர்வில்லாதவர் சற்று - முணரா அருவே
உணருமறிஞர்க்குநல் - லுருவே - பரமசற்குருவே (பங்கஜ)
திருமலைசக்கயனை - மருவியாள் மெய்யா
தெய்வம் நீயென்பதென்னபொய்யா - வரந்தருங்கையா (பங்கஜ)

விடமுசாயாவே - என்ற மெட்டு.

16. இராகம் - கரகரப்பிரியா - ஆதிதாளம்.

பல்லவி.

மனமேயோடாதே - ஜக - மருளால்வாடாதே

அநுபல்லவி

தினமேதாவில் மானுர் தழலும்
செங்கைகொளீசனை - நினையா துழலும் (மன)

சரணங்கள்.

பொன்னிலமுடனே - தாவுநற் சேலே
போல்நீள்விழியா - ராசையி ஞலே
தன்னேரில்லா - ஈசன் காலே
தஞ்சமென்றது - துருமெயில் போலே (மன)
தொண்டர்தம்மீது - நல்லருள் பழுத்துச்
சொரியும்தேவ - தருவென வழுத்து
மண்டர்கோமான் - திருவைந் தெழுத்து
மறியாதுன்னுட னென்னையு மிழுத்து (மன)

சீராரறிஞர் நேசம் வாவும்
திருமலைசக்கயன் சிந்தையில் மேவும்
காரார்கண்டன் செயலை யாவும்
கணமதிற்பதினு லுலகமும் தாவும் (மண)

கொஞ்சவயதாசசே ஏனைக்கூடலாகாதா – என்ற மெட்டு.

17. இராகம் – வீரவசந்தா – ஆதிதாளம்.

பல்லவி.

சந்தரசேகர – கங்காதர – சம்போஹரனே

அநுபல்லவி.

பந்தமாமறைதேடும் – பரனேமிகவாடும்
பாவியேனுனைநாடுமெவகை பாராய் வரதா. (சந்த்ர)

சரணங்கள்.

சின்மயரூபனே – திவ்யப்ரதாபனே
தில்லைவாழ்நடராயா – செங்கண்மால்பணிதூயா
தினந்தொண்டர்சகாயா தூயா – தீர்த்தானேயனே. (சந்தர)
தற்பராதிருமலை – சககயன்போற்றும்
சச்சிதாநந்தபோதா – தமியேனமிசைவாதா
ஜகமாய்கையின்தீதால்மனந் தாழவில்லையே. (சந்த்ர)

18. இராகம் – காம்போதி – தாளம் ஆதி.

பல்லவி.

இநத வேளை நீவந்தெனையாள் சர்வேசா.

அநுபல்லவி

கந்த வேளைத்தந்த – காரணுயா ஞெந்த (இந்த)

சரணங்கள்.

வஞ்சமாயையாலே மருண்டே ஞெருக்காலே
அஞ்சலென்றென் மேலே அன்புறந்தாய்போலே (இந்த)
சிற்பராகங்காளா செய்யமலர்த்தாளா
அற்புதயாளா அம்பிகைமணாளா (இந்த)
திருமலைசக்கையன் தினந்தினமுமுய்ய
கருணைசெய்யுந்துய்ய கத்தனேயருள்செய்ய (இந்த)

19. இராகம் - சுருட்டி தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஜகதீசா - உன் - தாளிணையே தினம் நம்பினேன்.

அநுபல்லவி.

மிருதோத்திர - பக்த சுஜன - பாலனு - பிரணவசுந்தர. (ஜக)

சரணங்கள்.

அருமறைகாணுத் - தில்லை - யம்பலவாணு
கருணுகரசுந்தரேச - காரணபரிபூரணசம்போ. (ஜக)
கனகசபேசா - திருக் - கயிலைவிவாசா
ஜனகனுதியர் - தெளியமோன - சாதனமருள்சேதனசம்போ (ஜக)
அமரர்சகாயா - வரு - ளம்பிகைநேயா
சமரதிரிபுராந்தகசிவ தற்பரானந்தஅற்புதசம்போ (ஜக)
திருமகள்சேரும் - வகை - செய்தருள்கூரும
தருணமீதெனையாள் திருமலை சக்கயன்பணிமுக்யனேசம்போ (ஜக)

20. இராகம் - காமபோதி - அடதாளம்.

பல்லவி.

எப்படி விருவகிப்பேன் சின்மய
மாதவனே சிவனே.

அநுபல்லவி.

கற்பிதம்செய்தநீ காக்கவும் கடனும்
அற்புதனே தில்லை யம்பல நடனு (எப்படி)
தினமுங்கொடிய வாதை செய்தொருக்காலே
மனதைவருத்தும்வஞ்ச - மாயையினுலே (எப்படி)
சந்ததந்துன்பமெனில் - சகித்திடமுடியுமோ
இந்தத்துயரமெல்லாம் - என்றுவிடியுமோ (எப்படி)
இருமலையொருவில்லாய் ஏந்துசெங்கையா
திருமலைசக்கயன் தினந்தொழுமெய்யா. (எப்படி)

21. இராகம்-கானடா-அல்லது பைரவி ஆதி.

பல்லவி.

கருணுகரா கழல்தந்தெனைநீ காவையனே
கதிவேறில்லை கருணுகரா

அநுபல்லவி.

தருணமிதுவே தமியேனையாள்வாய்
சர்வலோக ஷாதா ரா வு தா ரா (கருணா)

சரணங்கள்.

அருணாசலேசா அமலாவிலாசா
அகண்டபரிபூரணா னந்தனே
திருநான்மறையின் சிரமேல்நடனா
தேவாதிதேவா ப்ரபாவா (கருணா)
வஞ்சமாம்ப்ரபஞ்ச மாயாவிகார
மருளால்ஷிதம மனம்வாடினேன்
செஞ்சடாதரா சிவலோகனே
தில்லைவாழ்நடேசா ப்ரகாசா (கருணா)
வரனே திரு-ம லைசக்கயனை
மகிழ்ந்தாண்டருள மாதேவனே
பரனேசெழும பனிமாமலைப்
பாவையொருபா காஷிர்மோகா. (கருணா)

சாமராஜபூபதே நமோ நமோ என்றமெட்டு.

பல்லவி.

22. தியாக - ராஜ ஸ்ரீயுமாமனோகரா

அநுபல்லவி.

ஏகனேயுமை பாகனேயெழில் நாகபூஷணா
ஈசா நேசா எனையருட்கண்பார் (தியாக)

சரணங்கள்.

சர்வலோகபூஜிதா க்ருபா லை யா
சாலவேய நுகூலந்தருமின் கோலமாமலர்த்தாள்
தா தா வேதா-தருணந் தருண மே (தியாக)
நீலக்ரீவபால சோமசேகரா
நேமனேநனி கோமளாகர காமதகனனே
நீதா நாதா ஷிமலசேதனா (தியாக)
திருமலைசக்கயன் பணிகருணாகரா
சின்மயானந்த ஷின்மலா என்மேல் வன்மமேதையா
தேவா வாவா சிற்சொரூபனே. (தியாக)

நாரணதேவா ரட்சித்தருள்புரி என்றமெட்டு.

23. இராகம் - பங்காளா - ஆதிதாளம்.

பல்லவி

ஸ்ரீகயிலாசா சித்தத்துறை அரஹரஉமாமஹேசா
தில்லையில்வாசா நடராஜா நற்சுயம்பிரகாசா (ஸ்ரீ)

அநுபல்லவி.

சோகமிகுஞ்சகல துன்பங்களுமகல
ஏகனேநீஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)
தீனதயாபரனே திகழ்கருணாகரனே
மீனவனேஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)
பாலவிலோசனனே பாவவிமோசனனே
நீலகண்டாஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)
மூவர்பாடலுகந்த முதல்வனே யாதியந்த
தேவதேவாஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)
திருமலைசங்கயன்றன் சென்னியில் மேவுமுன்றன்
இருகழல்தந்தென் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)

---

கமலநயனவாசு தேவா பாரோரெங்கபாரோ என்ற மெட்டு.

24. இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ரூபகம்.

பல்லவி.

சரணமுனையே நம்பினேனருள் தாதா ஜகநாதா.

அநுபல்லவி

பிரணவாகார உமைமனோகர பிஞ்ஞகா வரதா (சரண)

சரணங்கள்-

வானவர்பணி - தில்லையம்பல - வாணாமறைகாணா
ஞானசாகரனே தயாபர நாகபூஷணா (சரண)
பங்கயனொடு - மாலுந்தேடிய - பாதாசதுர்வேதா
சங்கராவிமலா சதாசிவசந்த்ரசேகரா (சரண)
ஆயிழையார் - மோகமாயை - யாலேபுவிமேலே
நாயினேனுள - மயங்கிடாமலே - நன்மையேபுரிவாய் (சரண)
சின்மயானந்தபரிபூரண - தேவாஎன்முன்வாவா
அன்புடன்திரு - மலைசக்கயனை - யாளுமீசனே. (சரண)

---

25. இராகம் காபி - ஆதிதாளம்.

பல்லவி.

பங்கஜபூம் பாதமே - பங்கஜ

அநுபல்லவி.

சங்கரபரசிவ தந்தருளு பய (பங்கஜ)

சரணங்கள்.

இரணமதிகுலவும் இரணகிர்சடில
பிரணவசொரூபனே சரணமுனதுயர் (பங்கஜ)
பூதலமிசைமறு மாதர்கள்மயலற
நீதயைபுரியினி யாதரவுனது (பங்கஜ)
சிலையிற்பொறியென நிலைநிற்பது திரு
மலைசக்கயன்முடி மிலைநிற்புனித (பங்கஜ)

---

26. இராகம் - தன்யாசி தாளம் - ஆதி.

பல்லவி.

ஈசாகனக - சபேசா வரதசோ - ணேசா சர்வேசா

அநுபல்லவி.

தேசாருமையொடு திகழும்பிரகாசா
சின்மயபரிபூ ரணபவநாசா (ஈசா)

சரணங்கள்.

நீலகண்டாகரு - ணைகரவிமலா
நிதநியானந்த அருவே
நேமவிரதஜன - காதியர்க்குண்மைநெறி
நிகழ்த்தும் பரமகுருவே
காலகாலா திருக் - கயிலைவாழ் நாதா
கடையனையினியேனும் காக்கவொண்ணாதா (ஈசா)
துங்கவேதாகம முதல்வா நறுமலர்
தூவியன்பொடு நாளும
துதிபுரிந்தேயறு பகைதீர்புனிதமெய்த்
தொண்டர்கள் தமையாளும்
செங்கமலநேர்சுர சேவிதசரணா
திவ்யதேஜோமய சேஷாபரணா (ஈசா)
தற்பரதீன தயாளா திருமலை
சக்கயன்தினம் போற்றும்
சம்போசங்கர தஞ்சமென்றடைந்தோர்
சஞ்சலங்களை மாற்றும்
சிற்பரனேதில்லை சிதம்பர தேவா
தினமுனைப்பணியும் சிறியன்முன்வாவா (ஈசா)

அணபணபபு



பரு லன்னமாடலாடவத்து என்றமெட்டு.

27. இராகம் - பைரவி - தாளம் ரூபகம்.

பல்லவி.

ன்னையேநா னம்பினேனே யுமைமணாளனே தினம் (உன்)

அநுபல்லவி.

அன்னைபிதா தெய்வமும்நீ யன்றியா ளாயா
ஆதரித்தெனை யாண்டருள்வா யமலனேமெய்யா (தினமுன்)
சோதிமதி வேணிபுனைசுந்தரேசனே
தூயசதுர் மறைகள்தேடும் சுயம்ப்ரகாசனே (தினமுன்)
நேமம்தவிரும் காதகர்பால் நேயம்நாடியே
நிலைகலங்கி வாதையாலே நெஞ்சம்வாடியே (தினமுன்)
பரிவுடன்திரு மலைசக்கயன் பரவும்பாதனே
பண்ணவர்சுரர் புரிதியான பரயநாதனே. (தினமுன்)

---

28. இராசம் - காபி - ஆதிதாளம்.

பல்லவி.

தேவாஎன்றன் மீதுகருணை செய்வாயிப்போதே ஆ (தே)

அநுபல்லவி.

பூவார்கொன்றை புனைசதுர்வேத
போதாநீகதியே ஆ (தேவா)
அஞ்சலென்றேயெனை யாள்வதற்குன்றனை
யல்லால் வேறிலையே ஆ (தேவா)
பொருந்தியபசுவைப் பிரிந்ததோர்கன்று
போலேவாடுகின்றேன் ஆ (தேவா)
திருமலைசக்கயன் சிந்தையில்மேவும்
தீனதயாபரனே ஆ (தேவா)

---

இத்தனைகோபமாகுமா என்றமெட்டு.

29. இராகம் - பியாகு - ஆதிதாளம்.

பல்லவி.

சச்சிதானந்தரூபனே சச்சி

அநுபல்லவி.

பச்சைநிறமேனிதிகழ் அச்சுதனயன்முதலோர்
நச்சியகலாதரனே உச்சிதமெய்ஞ்ஞான (சச்சி)

சாதனைசேர்மெய்யடியர் வாதனை தவிர்த்தருளும்
சீதளநறுங்கமல பாதமே கதியே (சச்சி)
ரஞ்சிதநலமேத-ருஞ்சிதம்பரநாதா
சஞ்சிதவினையகற்றும் குஞ்சிதபதம் தா (சச்சி)
செக்கரெழில்மேனியனே முக்கணனேயெந்நாளும்
அக்கறையாய்த்திருமலை சக்கயனையாளும. (சச்சி)

கமலநயஸரணி கடினபயஹரணி என்றமெட்டு.

30. இராகம் - கலியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

கனககிரிதரனே ஜனகமனோஹரனே
கங்காதரனே சஙகரனே

அநுபல்லவி.

அனகசுக்யானா புனிததியானா
அரஹரமோனா பிரதானா (கனக)

சரணங்கள.

அரவமர்பூணா பரமகல்யாணா
அம்பல வாணா - - - பிர வீணா
வரத தியாகா - - - சரதவிர் மோகா
வந்தெனை நீகா - - - வளர் யோகா. (கனக)
திருமலை சக்கய - - - னிருதய வுதய
தினகர வபய - - - பத வுபய
பரிபவ நாசா - - - சிரகிரி வாசா
பார்வதி நேசா - - - பர மேசா (கனக)

குகநாதா சண்முகநாதா மௌனதேசிகநாதா என்ற மெட்டு.

31. இராகம் காபி - ஆதிதாளம்.

பல்லவி.

பரதேவா சங்கரதேவா சோமசுந்தரதேவா சுரதேவா.
வரதேவா. பரதேவா.

அநுபல்லவி.

அரவாபரணா அம்புஜசரணா (பரதேவா)

மலர்மிசைவேதா மால்பணிநீதா
மணமென்றன் மீதிலிரங்காதா
சுக போதா ஜகநாதா (பரதேவா)

அமரர் சகாயா அன்பர்பால் நேயா
அருமறை துதிபுரி தூயா
திரு வாயா அருள் தேயா (பரதேவா)
திருமலை சக்கயன் தினம் பணிதியாகா
திகழ் புவனாம்பிகை பாகா
புனை தேகா எனை நீகா (பரதேவா)

---

மாதவமே தவமே என்ற மெட்டு.

32. இராகம் - தேசிகதோடி - ரூபகதாளம்.

பல்லவி.

சேவடியே கதியே - சிற்சொரூபானந்த
அற்புதனே யுன்றன் - சேவடி

அநுபல்லவி.

மேவுபேரின்ப - ஞானமோங்கவும்
விரவுதாமத - குணம்பின்வாங்கவும்
தாவுசஞ்சல - மனைத்தும்நீங்கவும்
தற்பரனேகரு - ணைவெள்ளந்தேங்கவும். (சேவடி)

விமலரிதய - கமலமதனில் - மேவுமனக சேதனு
அமலனேபல - சமயமுதல்வ - னைவேதபுராதனு
சிமயமாதுமணாளாவெனது - சிறுமையால்மிகவாடுதென்மனது
சமயமெனையாள்குமரன்றனது - தந்தையேயரவிந்தம்நேருனது. (சேவடி)
வஞ்சமாம்பிர - பஞ்சமாயையின் - வாதையால்மிகவெம்பினேன்
அஞ்சலென்றெனை - யாதரித்தருள் - அத்தனேயுனைநம்பினேன்
தஞ்சம்வேறிலை திருக்கண்மணியும் - தவளநீறுமெய்தன்னிலணியும
செஞ்சடிலா வின்தொண்டிற்றுணியும்-திருமலைசக்கயன் தினம்பணியும்(சே)

---

33. ஹைசஜாத்து டாலாமியா - என்ற இந்துஸ்தான் மெட்டு

பல்லவி.

இன்னம் நீயென் மேலே மெய்யா
என்ன கோபமோ ஐயா.

அநுபல்லவி.

பன்னகாபரணு ஜெகதீசனே
பரமாதித்யா ஓடராஜனே ஐயா. (இன்)

சரணங்கள்.

உன்னையேநம்பினேன்கதி நீயல்லாமல்யாணையா
என்னை நீவந்தாள்வா யுமைபாகனே
ஏழையேனென்செய்வேன் மௌனயோகனே ஐயா ஆ (இன்)

ஜெகமாயையாலேதினம் சிந்தைவாடினேனையா
சுகராதிமேலோர் தொழும்நீதனே
தொண்டனேற்கருள்கூர் சதுர்வேதனே ஐயா ஆ (இன்)
திருமலைசக்கயன்சொல் தேவதேவனே ஐயா
கருணாகரனே சர்வகாரணா
காமவேள்தகனா பரிபூரணா ஐயா. ஆ (இன்)

---

நாராயணா நன்னுகாவவையா என்றமெட்டு.

34. இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

சம்போசிவா தமியேனையாள்வாய் சம்போ

அநுபல்லவி.

அம்போருகன்மால் அமரர்பரவும் (சம்போ)

சரணங்கள்.

சர்வலோகநாதா சதுர்மாமறையின்
தலைவாமகேசா சசிசேகரா
நிர்விகாரபோதா நிமலாகருணா
நிதியேதினம் நின்னையேநம்பினேன் (சம்போ)
கனமாயைபாலே கலங்கியுன்பாதம்
கருதாதுழன்ற கடையேனையா
வனமேயணியும வரதாதிரு
மலைசக்கயனை மகிழ்ந்தாண்டருளும் (சம்போ)

---

35. இராகம் - தன்யாசி தாளம - ஆதி.

பல்லவி.

மனமேநீ - மானங்கெட்டு - வயிறுவளர்க்காதே.

அநுபல்லவி.

தினமுமநாய்களும் - மலந்தனை யுண்டு
ஜீவனமசெய்யவில்லலை - யாஅது கணடு (மனமே)

சரணங்கள்.

உணர்விலாதகாடு - றைந்திடு மிருகம்
உறவாம்பெட்டைதனை - வேறொரு மிருகம்
புணரச்சகித்திடா - தேயந்த மிருகம்
போதாதேயுனக் - கிணையெந்த மிருகம (மனமே)
பெண்டுபிள்ளைகளைப் - பிறா சேர்ந்திடவே
பிரியமுற்றுயவர் - தினம் சார்ந்திடவே
தொண்டுசெய்துநீ - கை தேர்ந்திடவே
துணிந்தாயேகை - பழி சேர்ந்திடவே. (மனமே)

பிணவீக்கம்போற் - றசைமிகத் துன்றி
பெரியமனிதனு - ளுயே யன்றி
குணமதிற்பெரியவ - னேசேர் குன்றி
குறுகியவுனக்கீ - டோவூர்ப் பன்றி (மனமே)
வாயில்வைத்தவிளக் - கெனவுங் குட்டு
வையகமெல்லாம் - தெரியவுனக்கு மட்டும்
தெரியாதாஇப் - படியுஞ்சரணை கெட்டு
திரிவாருண்டோ - வெட்கங்கக்கத்தி விட்டு (மனமே)
மானமழிந்தபின்பு - மலைபோலே பணம்
மாடாடுகளொடு - மருவியவங் கணம்
தானிருந்தாலுமதிற் - சற்றுமில்லை குணம்
தாரணிதனிலே - யவனேநடைப் பிணம (மனமே)
வழங்குகவரிமான் - ஒருமயிர் கேடு
வந்தாலுயிர்மடித் - திடுமெடி யோடு
மழுங்கவேமயிர்கத் - தரிக்கிலும் நீடு
மயிர்போச்செனமகி - ழுங்குறும் பாடு (மனமே)
உன்னெதிரபழியா - ததனல் நாணுய்
ஊர்சீசீயென - வுரைப்பது காணுய்
அன்னவர்சொல்லுமப - கீர்த்தியே பூணுய்
அணிந்தாயேவா - யுனக்கேன் வீணுய் (மனமே)
சங்கதிகளையா - னறிந்ததிற் கொஞ்சம்
சாற்றினேன்பழிச்சொல் - லோகொடு நஞ்சம்
நங்கவில்லையா - இன்னமுன் னெஞ்சம்
நான்றுகொள்ளச்சாண் - கயிறே பஞ்சம் (மனமே)
மானங்கைவிடா - தேஒரு போதும
மாதேவன்பத - மாமிரு போதும்
ஆனபெருமைதரு - மதைமுப் போதும்
அன்பொடுபணிவா யானுற் போதும் (மனமே)
திருமலைசக்கயன் - சொலுங்கவி மருந்து
செவிவாயாகத் - தெவிட்டநீ யருந்து
புணாதருபழிச்சொல் - லெனுநோய் பருந்து
போற்பறந்தோடுமுன் - னிடத்தினி விருந்து (மனமே)

---

மாதவனே - நெடு - படுநடுவினில் என்ற மெட்டு.

36. இராகம் - ஆரபி - ஆதிதாளம்.

பல்லவி.

சங்கரனே - திகழ் - சதுர்மறைமுடிமிசை திதிபெறநடமிடும் சங்கரனே.

அநுபல்லவி

துங்கமுனிவரர்கள் சுரர்தினம் போற்றும்
தூயவனேயடியர் துயர்களை மாற்றும் (சங்கர)
பன்மதபேதம் பாரில்விவாதம்
நின்மலபோதம நினதுபொற்பாதம் (சங்கர)
பவளமென்கொம்போ - படர்களம்கம்போ
இவள்விழியம்போ - என்றேன்சம்போ (சங்கர)
அரியுடனேவிதி அனுதினமுந்துதி
புரியுமுமாபதி பூவில்நீயேகதி (சங்கர)
தாழ்வகல்திருமலை சக்கயன்மனமிலை
வாழ்சிவனேகலை வளையுமுயர்கயிலைச் (சங்கர)

---

## காமாக்ஷியம்மையார்பேரிற் கீர்த்தனம்.

---

37. இராகம் மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஞானசுந்தரி மாதரி காமாக்ஷி யுனை
நம்பினே னெனையாதரி.

அநுபல்லவி.

வானதியணையகம் பாநதிமேவிய
வரகுணவற்புத க்ருபாகரி
மருவுசுலக்ஷணதயாபரி (ஞான)

சரணங்கள்.

டங்கஜாசன நல்வாணி பின்னைமுதலோர்
பரவு ப்ரீத்தியகல்யாணி
வெங்கஜானனனெழில் தங்குங்குக னுடந்த
மேவுஞ்சராசரங்கள் விளங்கிடவே தந்த
சங்கரிம்வயணையிற் பொங்கமுடனமர்ந்த
ஜகரக்ஷகி யரிசகோதரி
புகல்நற்சசி தவழ்ஜடாதரி (ஞான)
மகிமைவளருஞ் சிங்காரி - வஞ்சமேமிக
வளர்க்குமகிட சங்காரி
பகரும்நான்மறைகளும் - புகழுங்கரகபாலி
பாவலர்தமக்கருள் - பாலிக்கு மனுகூலி
அகிதவஞ்சர்மருமம் - வகிர்செயுந் திரிசூலி
அக்ஷயசுபகர வபிராமி
கச்சிநகரிலுறைசிவகாமி (ஞான)

அரவகங்கணி மாதங்கி திருமலைசக்
கயனென்னுளத்தில் நீதங்கி
கரதலாமலகம்போற் சிரமமனைத்தும் நீங்க
காக்ஷிகொடுத்தெனது கருத்தில்மகிழ்ச்சியோங்க
வரமுதவியுன்பாதம் சிரமிசையான் தாங்க
வைத்தருள்புரிதிரிவிலோசனி
பக்தர்களது பவ விநாசனி (ஞான)

## சுப்பிரமணியர்பேரிற் கீர்த்தனங்கள்.

கடதேரராதாமனஸா - என்றமெட்டு

38. இராகம் தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சிவசாமிநாதாசரணம் - சிவசாமி.

அநுபல்லவி.

பவசாகரத்திற் - படிந்துழலுமென்மேற்
பராமுகம்செய்யாதே - பரங்கிரிவாஸ (சிவ)

சரணங்கள்.

தஞ்சம்வேறில்லை - தமியேனையாளத்
தருணம்தருணம்தடையேதையா
அஞ்சலென்றெதிர்நின்றே - யனவரதமும்நீ
அடிமைகொண்டெனைத்தேற்றி - யாதரிக்கவேணும். (சிவ)
நத்தினேனுனை - நலந்திகழுமுன்றன்
நறும்பூங்கழலிணை - பெறநாடியே
பத்திநெறியிற்கூட்டி - பதிதனெனையாள்வாய்
பழமறைக்குமெட்டாப் - பரப்பிரமசொரூப (சிவ)
இனியாகிலும் - எளியேன்கடைத்தேற
ஏதாகினுமோர்வகை சொல்லையா
தனியானமோன - சரதனேதெய்வானை
சமேதாதிருமலைசக் - கயனைரக்ஷிக்கும் (சிவ)

39. இராகம் பீல் - பியாகு - ஆதிதாளம்.

பல்லவி.

மலரடிதந்தாண்டருளையனே
மௌனதேசிககுகனேபன்னிருகையனே

அநுபல்லவி.

சிலைமகள்புதல்வா - கலைபகர்முதல்வா
சேவலனே செந்திற் காவலனே
சிந்தனையால்வெம்பினேன் உன்றனையோம்பினேன்
செவ்வேளேதருணம் இவ்வேளை யுன்றன் (மலர்)
சற்குணம்விடுத்த - துர்க்குணம்தொடுத்த
சண்டாளனென்றெனைத் தள்ளாதே
சரவணபவநாதா குரவணியும் விநோதா
தயைபுரிவாய்கபடங் கொள்ளாதே யுன்றன் (மலர்)
இன்பமும்சிலநாள் - துன்பமும்சிலநாள்
என்பதுமென்னளவிற் பொய்தானோ
இரங்கவில்லையாமனம் - பரங்கிரியானே தினம்
ஏழையடியேன்மனம் நைவேனோ வுன்றனன் (மலர்)
செஞ்சுடர்வேலா ரஞ்சிதசீலா
திருமலைசக்க கயனுக்கநு கூலா
சிறுமைசெய்திடும்சோக - வறுமைமுழுதுமேகத்
திருக்கடைக்கண்பார்பசு - பதிபாலா வுன்றன். (மலர்)

---

40. இராகம் சாவேரி ஆதிதாளம்.

பல்லவி.

கருணாகரதிவ்ய - தேஜோமயாநந்த
கந்தசாமீ வந்துகா

அநுபல்லவி.

வருணாதிபேத மடங்கலும்நீத்து
மருளகற்றி - யருள்மிகுத்த - முனிவர்கள்
மகிமை-வளரு - மிதய - மனையி - லிலகிய (கருணா)
சஞ்சலமேதரும் வஞ்சியர்மேலே
தாழாமயல்கொண்டு தவித்தொருக்காலே
நெஞ்சம்தளர - வஞ்சம்வளர
வினைவழிந்த ■ எனது சிந்தை - நிலைபெற
நீத - வேத - போத - சீத - பாதனே (கருணா)
என்னபிழைசெய்யினு மிரங்கிதத்துடனே
இரங்கியடியேனையீ டேற்றலுன்கடனே
சின்னம்சிறியேன் - நன்மையறியேன்
சிறுமைதீர - பெருமை சேர - மகிழ்வொடு
சித்த - சுத்தி - புத்தி - வித்தை - யுற்றிட (கருணா)

ஜெகபரிபாலனை சிவைமகிழ் பாலா
திருமலைசக்கயன்சொல் செஞ்சுடர்வேலா
குகவிசாகா சிகரவாகா
குறவர்தங்கள் - மரபில் வந்த - நலமிகு
கொங்கு - தங்கு - கொங்கை - மங்கை - கொண்கனே. (கருணை)

---

எந்தனிடம் வந்தவரை ஏனழைத்தாயடி என்றமெட்டு.

41. இராகம் பரசு சாப்புதாளம்.

பல்லவி.

சந்ததமு முன்றனிரு தாள்கொடுத்தாளெனை - சந்தத

அநுபல்லவி.

மந்திரதந்திரசு தந்தரமானகந்தனே (சந்தத)

சரணங்கள்.

ஆதியானகன்மமா அடிமைநான்வீண்ஜென்மமா
எதின்னமும்வன்மமா இது தன்மமா
வாதையால்மிகவெம்பினேன் வரதாவுனைநம்பினேன் (சந்)
சித்தமென்னகல்லையா சிறிதுமிரங்கல்லையா
சித்தமிந்ததொல்லையா சொல்லையா
கத்தனேநீபரிந்து கருணைமிகப்புரிந்து (சந்தத)
மருவுசிவன்மகனே மாமன்றன்மருகனே
தருமௌனதேசிகனே சண் முகனே
திருமலைசக்கயன்மேல் சித்தமிரங்கியனைபோல் (சந்தத)

---

42. ஏமிசேது எடுலசைது என்ற ஜாவளி மெட்டு.

பல்லவி.

போதும்போது மென்றன்மீது வாதுசெய்வதேதையா

அநுபல்லவி.

ஓதுமாதிரான்மறைகளும் ஓமெனும்பிரணவாகராதுயர் (போதும்)

சரணங்கள்.

சற்றுமோய்வி லாமலேயெனைச் - சஞ்சலமிகவாட்டுதே
முற்றுமிந்த வாதைசகிக்க - முடியுமோஜகதீசனே வன்மம் (போதும்)
அன்னையின்றி மைந்தர்தம்மை - யாதரிப்பவராரையா
உன்னையன்றி யெனக்கோர்துணை - யுண்டோபவநாசனேமிடி (போது)
அடிமையாம்திரு மலைசக்கயனை - யாளும்பழநியூரனே
அடிமைநோ யெலாந்தவிர்த்தருள் - வேலனேயுமைபாலனே துன்பம் (போ)

34. மைங் ஸாத்தியுவர ஸாச்சஸதா என்ற இந்துஸ்தான் மெட்டு.

கண்ணிகள்.

மெய்ஞ்ஞானகரு ணாகரஸதா மோன தேசிகா
வானவரநு தினமேபணி - த்யான பூஜிதா
உன்னையன்றி வேறுகதி - பின்னை யேதையா
முன்னைவினை யோவென்மீதி - லென்ன வாதையா
அமரர்பிரா ணிடர்தீர்த்த - சமர வேலனே
ஆதியந்த ரஹிதபரஞ் - சோதி பாலனே
இன்னமிந்த வன்மமென்று - லென்ன செய்குவேன்
இப்படிச்செய் தாலெவ்வித - மேழை யுய்குவேன்
சிகரசிவாத் திரிமேவும் - சிவகுரு நாதா
திருமலைசக் கயன்போற்றும் - திகழ்மறு நீதா

---

காமினி வினவே யிபுடு என்ற ஜாவளி மெட்டு.

44. இராகம் சங்கராபரணம் ஆதிதாளம்.

பல்லவி.

தாமதம்செய்யா தேயிப்போதே அருள்
தா தா விதுசமயம்

அநுபல்லவி.

காமதகனன்சேயே நீமனமிரங்கியினித் (தாமதம்)

சரணங்கள்.

அன்பர்கள்தமைச்சூழும் - துன்பமறவேநீக்கி
இன்பமுறவேகாக்கும் - தென்பழநிவேலாநீ (தாமதம்)
தஞ்சமுனை யன்றியிலை - யஞ்சலென்றடியேனை
சஞ்சலம்தவிர்த்தாளுன் - செஞ்சரணை நம்பினேனே (தாமதம்)
குக்குடமிலங்குதுவ - சக்கரனே திருமலை
சக்கயனை யாண்டருளு - மிக்ககருணாகரனே (தாமதம்)

45. இராகம் - கலியாணி ரூபகதாளம்.

பல்லவி.

திருவருள்புரிகந்த ஸ்வாமியே - நீயேகதியல்லாமல்
திக்குண்டோ ஆனந்தநேமியே.

அநுபல்லவி.

கருணைபொழியுஞ்செம்பொற்றாளா - காமனுதவுதெய்வானைமணாளா
மருவமர்கடம்பணிதிண்டோளா - மாமறைபோற்றிடும்தீனதயாளா
மதியும்புனலுங்கொன்றையின் - மலரும்புனையுஞ்செஞ்சடை
மலியும்பரமன்றன்சுத - மவுனந்திகழும்சுந்தர (திரு)

TIRUVANMIYUR, MADRAS-41.


மண்ணில்வடுவீழ்மாதர்மோக - மயக்கறத்தென்றன்வல்வினைபோக
புண்ணியர்பாலெனைக்கூட்டியனேக - புத்திவித்தைதந்தேயஷ்டா
பொதியைக்குறுமாமுனிமன - மகிழக்குருவாகியமிகு [ங்கயோக
புனிதக்குமராவநுதினை - மிசைபெற்றிடநீதயவொடு (திரு)
இன்னமென்முன்வரத்தாமதமேது-இடர்சகிக்கவென்றால்முடியாது
வன்னக்கலாபமயூரத்தின்மீது-வந்துதரிசனந்தந்திப்போது
மடமைத்தன - மகலச்சிவ னடியைத்தொழு மிருபத்தியென்
மனதிற்குடி - புகவற்புத - மகிமைப்பிர பலவித்திய (திரு)
சித்திதரும் சிங்காரவேலா - திருமலைசக்க யன்பணிசீலா
பத்திசெயுமன் பருக்கநுகூலா - பர்வதராஜ குமாரிதன்பாலா
பரிந்துவிறைந்துசுரர்தினம் - விழுந்துவணங்குதிருமுடி
படிந்துசிவந்தபதமலர் - வினைந்துதிருந்தவரமது (திரு)

---

46. இராகம் காம்போதி - அடதாளம்.

பல்லவி.

மயில்வாகனனேகூ - ரயிலாவடியேன்முன்
வந்துகாத்தருளையா

அநுபல்லவி.

அயிலாமாமுலை - குயில்தாவிமாசலை
ஆமளையருளிய - கோமளதேகனே (மயில்)

சரணங்கள்.

வருமாகுலமெனும் - திரைவீசியமோக
வாரியில்வீழ்ந்துநொந்தேன் - நாளும்
திருமாதவர்வந்து - மருமாமலர்தூவும்
சீறடிப்புணை - தந்தே
இருமாதிரமிசை - பெருவாழ்வுடனிசை
எய்தும்படிகிருபை - செய்துசந்தமுமென்
இதயமாமனை - யதனிலேகுடியா - யிருந்தருள்
இந்திராதியர்பரவுமேகனே - கந்தனேகுகனேவிசாகனே (மயில்)
ஏதாயினுங்கதி - நீதானெனநெஞ்சில்
எண்ணினேனிதுபொய்யா - வகை
ஓதாயெனக்கினி - யாதாரமுனையல்லால்
உண்டோசொல்முரு - கையா
தீதாகியவெய்ய - சூதாதிகள்செய்யும்
தீயருறவுதீர்த்து - அயர்குழாம்சேர்த்து
சிறுமையுங்கொடு - வறுமையுங்கெடுமுன் - திமிரமாக
தீவினைத்தொடரகலமுத்தமிழ் - நாவிலுற்றிடவரமளித்திட (மயில்)

கொந்தாருங்கடப் - பந்தாராதேவ
குஞ்சரிமண வாளா - கமழ்
சந்தாடவிசூழும் - செந்தூராதிருமலை
சக்கயன்பணி தாளா
முந்தாலடியில - மர்க்தேஜனகன்முதல்
முனிவருளம்விளங்க - இனிதாகவேதனி
மோனமேதரு-ஞானசாதனமே-ஓதாதுணர்த்திய
முக்கணக்கர்பயந்தசேயே - இக்கணதில்வினைந்துநீயே (மயில்)

47, இராகம் - பியாக் - ரூபகதாளம்.

பல்லவி.

என்னகுறை சொன்னபோதிலும்
இன்னமும் வாதா மன- மிரங்கலாகாதா.

அநுபல்லவி.

வன்னந்திகழு மன்னஞ்செறியு மாவயலூரா - தில்லை
பொன்னம்பலவர்-முன்னம் பிரணவம்-புகன்றமாயூரா - எப்
பொருட்குமாதாரா - - - - (என்ன)
நிகரிலா மிகு மகிமை சேர்சைவ - நெறிதனிற்சென்று - நல்ல
இகமொடுபர - சுகமுமெளியேன் - எய்தமுன்னின்று - வரம்
இனிதுநல்கென்று - - - - - (என்ன)
பணிமென் கடம்பு - புனைவின்னெழிலும் - பரிபுரத்தாளும் - மனக்
கனிவுடன்றினம் - நனிதொழுமன்பர் - கவலைதீர்த்தாளும் - நீயே
கதியெனநாளும் - - - - - (என்ன)
சுந்தரமிகு - கந்தநளின - தூயபொற்பாதா - அன்பாய்ச்
சந்ததந்திரு - மலைசக்கயன்சொல் - தமிழ்புனைநீதா - சிவ
சண்முக நாதா (என்ன)

48. செலியாலா போப்போ பொம்மனவே என்ற ஜாவளியின் மெட்டு.

பல்லவி.

குகநாதாவென்மீது வன்மமா - குகநாதா

அநுபல்லவி.

மிகு கருணை முக சுகுணை - புகலவொணு (குகநாதா)

சரணங்கள்.

என்னமுறைபகர்ந்து மின்னமென்மீதுன்
இதயமிரங்காதா - பதவிதரும்பாதா - முதுமறைபணி (குகநா)

சஞ்சலம் நாளுமீ நாளு மிஞ்சவைப்பதுனக்கு
சம்மதமா முருகா செம்மலர் மான்மருகா பெம்மானே (குகநா)
தாசனும் திருமலை சக்கயன்றமிழ்க்கு
தாழ்வணுகாதவிதம் சூழ்வினைபோகவிதம் வாழ்வருள்வாய் (குகநா)

செவிமனக்யாலவாணி தோணிபொந்து சாலுனே என்ற ஜாவளிமெட்டு.

49. காபி - ராகம் - ரூபக - தாளம்.

பல்லவி.

கருணைசெய் திவ்யரூபமோனகந்த நாதனே
மோனகந்தநாதனே மெய்ஞ்ஞானகஞ்ச பாதனே

அநுபல்லவி.

என்னதுயர்சொன்னபோது - மின்னமென்மேல்வன்மமா
இன்னமென்மேல்வன்மமா சர் - வேசனேயிதுதன்மமா (கருணை)
தீவினையே னென்றன்மீது - சித்தமிரங்கவில்லையா
சித்தமிரங்க வில்லையாதுயர் - தீரவோர்வகை சொல்லையா (கருணை)
சந்ததந்திருமலைசக்கயன்சொல் - தமிழ்புனைமுருகையனே
தமிழ்புனைமுருகையனே எழில் - தங்குபன்னிருகையயனே (கருணை)

---

50. இராகம் - பைரவி - ரூபகதாளம்.

பல்லவி.

இனியாகிலு மெனையாதரித் - திடுவாய் குமரேசனே - இனி

அநுபல்லவி.

அநியாயமாய்த் தனியாக நான்
அனவரதமு மெலிவேனோ கனவரதனே பகைநானோ (இனி)

சரணங்கள்.

எத்தனைநா ளெனவடியேன் இத்துயர்களைச்சகிப்பேன் ஐயா
எந்தவிதமாகமன மிசைந்தேழை கிர்வகிப்பேன்
சுத்தமௌன தேசிகனேகை - சோரவிட்டிடாதேதிகழ்
தோகைமயில்மீதாகிய - தூயகோகனகபதா நேயமா விமலசுதா (இ)
மானமில்லாநீசனாக்கன வானுகவே மதித்தேன் ஐயா
மானுபரணனைநெஞ்சினில் மதியாதவமதித்தேன்
ஞானஞ்சிறிதுணராமலே நாயேன் கடையானேன்மிகு
நலமேயருள் தருணங்குக நாதா வேதாபரவிய நீதா வாதா அனுதி
[னம் (இ)

இன்னமென்றன் மீதுன்மன மிளகா வகையேதோ சுமமா
ஏனோதானோ வெனநீ யிருக்கிறாயிது சூதோ
சின்னஞ்சிறியேனலமிடர் தேரேன்வகை யோரேனனி
திருமலைசக்கயனை வாழ்விக்கும் சேமாவாமா சதிசெய - லாமாசேமா
[தயவொடு (இனி)

51. இராகம் - நாதநாமக்கிரியை - ரூபகதாளம்

பல்லவி.

இந்தவேளை நீ மனஞ்சற்று மிரங்கிடாவகையேதுசொல்லையா

அநுபல்லவி.

சுந்தரநீல கந்தரர்பால துங்கவைவேலனே - யெழிற்
கந்தனேயுயர் - தந்திசகோதரா
காங்கேயனே முருகையா பராசலா (இந்த)
அம்புவிமேலே ஆகுலத்தாலே ஆகமெலிந்துநான்தவிக்கவோ
வம்புலாவிய - கும்பமாமுலை
வள்ளிதெய்வானை - மகிழ்மணவாளனே (இந்த)
கொங்கமர்வாகா கோமளதேகா கும்பமுனிக்கருள் போதனே
பங்கயாசன -மங்கைமருகனே
பார்வதிபுத்திரா - பன்னிருகையனே (இந்த)
பாமரன்மீது பரிந்திப்போது பக்ஷம்வைத்தாள் குமரேசனே
தாமனேமிகு வாமாதிருமலை
சக்கயன்போற்றுஞ்சலச பொற்பாதனே. (இந்த)

52. இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி

நானுனையே நம்பினேன்வேலனே.

அநுபல்லவி.

வானவருடனுயர் மோனமுனிவர்பணி
ஞானகுருவேயடி யேனெதிர்நீ
வாவா - குக - தேவா திகழ் மகானுபாவா (நானுனை)
மதியறுகொடுகுளிர் நதியணிசடையுமை
பதியருள் சுதநீ கதியினமும்
வாதா மநு - நீதா சிவசண்முகநாதா (நானுனை)
ஆரண மதிலுறை பூரணனேசருவ
காரணனேதுவச வாரணனே
ஐயா - மிகு - துய்யா பன்னிருமலர்க்கையா (நானுனை)

தாமதகுணமய - பாமரர்களையனு
காமலருள்புரிவாய் - வாயமலர்த்
தாமா - கன - ஹேமா எனைக் கைவிடலாமா (நானுனை)
தக்கவுனக்கடிமை - புக்கவன்திருமலை
சக்கயனுய்ந்திடவே - மிக்கவரம்
தாதா - மலர்ப் - பாதா குறமகள்ச மேதா (நானுனை)

53. இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

சிவாசலாமா நடனமயூரா - திருவருள்புரிவா ய்குகா

அநுபல்லவி.

தவாதபிணியால் - ஒயாமிடியால் - தளர்வேனேயிதுதகா
தமியேன்மிசைதயை செயாமலிருப்பது சம்மதமா சண்முகாஓ (சிவா)
பலவிதமாயா விகாரவலையிற் - பக்ஷிபோலவென்மனம்
படாமலருள்நின் - த்யானுதரமே பக்தபவவிமோசனம் ஓ (சிவா)
ஜெனனமரணநோ யுறாத சற்ஜன சேவித கருணைபதம்
தேடியறியவகை - யிலாதவடியேன் தெரிசித்திடவேநிதம்-ஓ (சிவா)
மாசிலாமவுன திடமாதவர்முன் மகிழ்வுடனெதிரே வரும்
வரதாதிரு- மலைசக்கயன் வாழவேகிருபை தரும்-ஓ (சிவா)

54. இராகம் - காபி - ஆதிதாளம்.

பல்லவி.

ஓவேலவா உசிதாமயூரா - ஓவேலவா

அநுபல்லவி.

தேவா வரதா - சின்மய ஸ்வரூபா (ஓவேலவா)

சரணங்கள்.

காமாதிமோகக் - கடலினிடைமூழ்கிக்
கலங்குமெனைநீ - கரையேற்றவேணும் (ஓவேலவா)
மாயாவிகார - மயல்தீர வென்முன்
வந்தாலுன்பதும மலரடிகள்நோமோ (ஓவேலவா)
எப்போதுந்துன்பம் - என்றுவின்பமெங்கே
இனியாகிலும்வந் தெனையாளொண்ணாதா (ஓவேலவா)
சன்மார்க்கநீதி - தவறாதவர்க்கு
தனதாதிருமலை - சக் கயன்றுதிக்கும் (ஓவேலவா)

55. இராகம் - துசாவந்தி - ஆதிதாளம்.

பல்லவி.

தஞ்சமுனைநம்பினேன் - அஞ்சலென்றெனையாள்வாய்
சாமிசண்முகநாதா

அநுபல்லவி.

செஞ்சலசந்திகழு - மஞ்சன விறை கயம்
செறியும்பழனிவாழும் தேவாவுனக்கபயம் (தஞ்ச)

சரணங்கள்.

ஒன்றிரண்டாபலவாய்த் துன்றும்சமயபேதம்
உலகிலிதுபிர மாதம்
சென்றுசைவநெறியிற் சேர்வதுவே நீதம்
என்றுநான்மறைகளுமியம்புவதாலுன் பாதம் (தஞ்ச)
பொல்லாதவிஷயங்க - ளெல்லாமுயன்றபேயே
போலலைந்தேன் சேயே
கல்லாதவெனக்குநீ கல்விதந்தருள் வாயே
அல்லார்குழல்வள்ளிதெய் வானைகொண்கா நீயே (தஞ்ச)
நாரமணிசிவகு மாரா கடப்பந் தாரா
நடனஜெயம பூரா
சூரதளவிக்ரக சுரர்தமக்குப காரா
தாருவே திருமலை - சக்கயனுக்கு தாரா (தஞ்ச)

---

56. இராகம் இந்துஸ்தான் - ஆதிதாளம்.

பல்லவி.

என்றன்குறைதீரமுகம் பாராயோ - நான்
ஈடேறும்படியருள் கூராயோ

அநுபல்லவி.

வென்றிசெய்மயில்மிசை வருவோனே - நாளும்
மெய்யடியார்க்கருள் தருவோனே (என்றன்)

சரணங்கள்.

சாதுசற்ஜனர்கேண்மை விடுத்தேனே - கெட்ட
தகல்பாஜிகளுடனே யடுத்தேனே
ஏதுபிழைசெய்யினும் பொறுப்பாயே - யெனக்
கிகபரசாதன மளிப்பாயே (என்றன்)
இன்னமும்பலவிடர் சகிப்பேனோ - இனி
எந்தவிதமாகவிர் வகிப்பேனோ
சின்னஞ்சிறியே - னென்றன் மேல்வா்தா- துயர்
தீர்த்துநற்கதிதரலா காதா (என்றன்)

மாதவர்தினந்தொழு மலர்த்தாளா - குற
வள்ளிதெய்வானைமகிழ்மண வாளா
சீதமதிவதனனே குகனே அன்பன்
திருமலைசக்கயன்சொல்தேசிகனே (என்றன்)

57. இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

சாமீ யென்மேல் வன்மமா - வரத கந்த
சாமீ யென்மேல் வன்மமா

அநுபல்லவி.

நேம வன்பர் மனது - விறைந்திலகு முனது
பூ ரலர்ப் பத கஞ்சமே தஞ்சமே - கந்த (சாமி)
அன்றமரர்க்கு வென்றி - யருளு மின்க்ருபையன்றி
என்றன்கவலை யாறுமா மாறுமா - கந்த (சாமி)
முற்று மென்றன் விசனம் - மொழிந்திடினு முன்மனம்
சற்றுமிரங்கவில்லையா சொல்லையா - கந்த (சாமி)
திருமலைசக்கயன் சொல் - செந்தமிழ் புனையும் நல்
அருமறை நாதா சரணஞ் சரணங் - கந்த (சாமி)

---

58. இராகம் - சங்கராபரணம் - ரூபகதாளம்.

பல்லவி.

தருணந் தருணஞ் சண்முகநாதா - மழைபொழிவதற்கிது
தருணந் தருணஞ் சண்முகநாதா

அநுபல்லவி.

அருணச்சுடர்வடிவேலா - அம்பிகைதந்தருள் பாலா (தரு)

சரணங்கள்.

கோடை வெய்யலிற் புழுவைப்போலே
குவலயந் தத்தளிக்குதே யிந்த
கொடுமை யறிந்து மனதிற் கிரு பை
கொஞ்ச மு மிலை யா
நீடியதாது வருஷப்பஞ்சத் தில்
நேர்ந்த துன்பம் தீர்ந்துந் தீரா திருக்குதே
பீடைச்சுரத்தால் மெலிந்து தேறும்போது
பின்னுஞ்சயரோக மேலாடினாற் போல
பிழை யெய்து முனே ஐயா - மழைபெய்திடவே செய்யாய் (தரு)

தீமையே மிகப்புரியும் அன்னையும்
சேயின் மனது களித்திடப் பால்
செழிக்கக் கொடுத்து வளர்ப்ப தெவர்க்குந்
தெரிந்ததே யன் றோ
ஆமையுஞ்சில காலந்தன் முட்டை யை
அகன் றிடினுந்தருணாந் தவறா மல்
நேம மாகத்தன் குஞ்சுகள் மேல் மனம்
நிகழுமேயது போலே காக்கும் பான்மை
நின்பாலிலையாமா மழை - அன்பால் வரவே நீயழை (தரு)

மன்றல் கமழும் நீபனே திரு
மலைசக்கயன் றன்மனதிலே வைகும்
மவுன தேசிக நாதனே யிந் நாள்
மழையின் றாழ்ச்சி யால்
துன்று பயிர்கள் வாடிக்கசங்கி
சுருளுதேபுவி செழிக்கவேமழை
இன்று பெய்யும் நாளைப் பெய்யு மென்
றேங்கிய மானிடர் யாருங்களிப்புற
இப்போதே மழைபெய்யத தப்பாதே யருள்செய்ய (தரு)

பரப்பிரம்ம சுரூபாசரணம் - என்றமெட்டு.

59. இராகம் - சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

எனக்கருள் செய்குவாய் குகனே - இக்ஷணமதில் மகிழ்வுடன்
எனக்கருள் செய்குவாய் குகனே.

அநுபல்லவி.

மனத்திலடியவர் - நினைத்தபடியெதிர் - வந்தேகன
மகிமை செய்குருபர - சுகமது பெறவரம் (எனக்க)

சரணங்கள்.

ஞானவரதத்வ மோனமுனிவர் தினம்
நாடு முபய பாதா சுரர்
நாயக வடிவமர் தூயகுறவ னிதை
நாதமிகு விநோதா
தீனமெனு மிடிமை - தானகலவடிமை - செய்தே கனி
சித்தத்தினினுனை நத்தித் தினம்நினை (எனக்க)

வாத சீமயபல பேதமதனில் நல
மருவு சைவஸ்வரூபா ஜெய
வாமதிடநடன சாமளப்பிணிமுக
வாகன கமழ் நீபா
சிதநளினமுக மாதர்குலதிலக தெய்வானைமின்
திகழுறுவாகா புகழும் விசாகா (எனக்க)
பாலநயனதிரி - சூலபுரதகன
பரமனுதவு பாலா - வெய்ய
பாபவிர்தயகன - கோபவசுரருயிர்
பருகு விஜய வேலா
தாலமதனில்மிகு - சீலமுதவுமுன - தாள் மாமலர்
தலையுற்றிடுதிரு - மலை சக்கயனெனும் (எனக்க)

ராராநே தாழசால – என்றமெட்டு.

60. இராகம் தோடி–ஆதிதாளம்.

பல்லவி.

வாவா மயூரநாதா - என்முன் - வாவா

அநுபல்லவி.

மரகதமா - மயில் மிசை யடிமை முன் (வாவா)

சரணங்கள்.

கமல சரண பிரணவ கோலா - கலசுபகரஜெய வடிவேலா
கருணைசெய்தெனை நீ - காத்தருள்வாய்ஞான
கந்த நாயக கிருபாகரா என்முன் (வாவா)
திருமருவிய சிவகிரிவாசா - செழுமறை பரவிய முருகேசா
திருமலை சக்கயன் சிந்தைதனில் மேவு
திவ்ய மோன பரிபூரணா என்முன் (வாவா)

61. இராகம் - மாஞ்சை - ரூபகதாளம்.

பல்லவி.

வேலாயுதனே - நீ - வினைதவிர்த்து நீ மேன்மை தந்தாள் வடி
வேலாயுதனே -

அநுபல்லவி.

சீலா இந்திரனாதி தேவர்படு மிடர்
தீர்த்தே யசுரரைச் - செற்ற செழுஞ்சுடர் (வேலா)

மடவார் மயலால் - மனம - வாடிமிகவும் வருந்தித் தவித்துநான் மட
படவருமொட்டிற் பட்டுழலும் - பக்ஷி
பான்மைபோலாகாமற் - பண்பா யென்னை ரக்ஷி (வேலா)

இரவும் பகலும் - உனை - யிதயமதனி - லிருத்தியன்புடன் - இரவும்
பரவு நானுன்றன் பாதப்புணை பற்றி
பவக்கடல் கடப் - பாவெண்ணினே னன் வெற்றி (வேலா)

கருணாகரனே - வள்ளி - காந்தனே ஒராறு கஞ்சவதனனே - கரு
தருணம் வானவர் - தாழுந்திருவடி
தந்தாள் திருமலை - சக்கயன் சொல்வடி (வேலா)

---

அப்பனே - பழனி - அப்பனே என்றமெட்டு.

62. இராகம் காபி - ஆதிதாளம்.

பல்லவி.

வன்மமா - இன்னமும் - வன்மமா

அநுபல்லவி.

சின்மயரூபா குரவலர் சூடும்
தேவா தேவா தினமென்மேல் நீடும்

சரணங்கள்.

சஞ்சல மென்னாற் சகிக்கவொண்ணா தே
தமியேன் முறைகே - ளாதோ நின் காதே
அஞ்சலென் றெனக்கோ ருறுதிசொல்லா தே
அடிக்க அடிக்கக்கை - யேந்துமென்மீ தே (வன்மமா)

பாணியிலயிலும் - பன்னிரு தோளும்
பங்கஜநிகராம் - பரிபுரத் தாளும்
காணவே யெதிர்வந் - தடியனை யாளும்
கருணாகரமுரு - கையனே நாளும் (வன்மமா)

சுருதிசேர் வேதம் - நாறிய வாயா
சுகுணாலயபசு பதியருள் சேயா
திருமலை சக்கயனுக்குதவு ச காயா
தேவகுஞ்சரி வள்ளி- காந்தனே ஓயா (வன்மமா)

63. யார் போய்ச் சொல்லுவார் - துரைக்கார் - என்றமெட்டு.

பல்லவி.

வாதா சொல்லையா - இன்னமு - வாதா சொல்லையா

### அநுபல்லவி.

மாதரி பாலா - போத ஷி சாலா
வாழ்த்து மன்பருக் கநுகூலா - கதிர்வேலா - என்மீது (வாதா)

நித்ய விநோதா இத்தனை சூதா
நெஞ்சங்கொஞ்சமு மிரங்காதா - குகநாதா என்மீது (வாதா)

சத்துருநானோ சம்மதந்தானோ
சஞ்சலங்களைச் சகிப் பேனோ - வன்மமேனோ என்மீது (வாதா)

சந்ததந்திருமலை - சக்கயன் சாற்றும்
சாமியன்பர் கவலை மாற்றும்-உனைப்போற்றும் என்மீது (வாதா)

---

64. இராகம் - தூசாவந்தி - ஆதிதாளம்.

### பல்லவி.

இன்னமென்றன்மீது வன்மமா - உலகமெனை
இகழச் செய்வது தன்மமா

### அநுபல்லவி.

அன்ன முடனே செழுங் - கன்னல் மலிபணைசூழ்
ஆவினன் குடிதனில் - மேவு சற்குருநாதா (இன்ன)

### சரணங்கள்.

வேதா - முதலோர்பணி பாதா - வழங்குமது
நீதா - தெய்வயானைச - மேதா பலசமய
பேதா - சொல்லரியவி - னோதா - அடியேன்மீது
வாதா - எனக்குநலம் - தாதா - சண்முகநாதா (இன்ன)

மையார் - குழல் வள்ளிசேர் துய்யா பலவளஞ்சேர்
வையா புரிவாழ் முருகையா பவள நிகர்
மெய்யா நீ தெய்வமெனல் - பொய்யா - அடியேன் மனம்
நையா - தெனக்குதவி - செய்யாய் - பன்னிருகையா (இன்ன)

கொந்தார் - பசியகடப் - பந்தார் - புனையுமெழில்
விந்தா சலபுயநற் கந்தா - துதிமிகும் ப்ர
பந்தா - எனைவருத்தும் - சிந்தா - குலமகற்றி
வந்தா - தரித்ததிசு - கந்தா சங்கரன் மைந்தா (இன்ன)

பக்ஷமிருக்கவேணும் - போய்வாரேன் - என்றமெட்டு.

65. இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்

பல்லவி.

முருகேசா நின்திருவடி தாதாதா - முருகேசா

அநுபல்லவி.

மருமலர்ப்பாதா வள்ளிசமேதா
மயங்குமென்றனைக்காக்க லாகாதா (முருகேசா)

தீவினையாலே தியங்கி மண் மேலே
சிந்தைகலங்குவேனோ ஒருக் காலே (முருகேசா)

செங்கதிர் வேலா சங்கரன் பாலா
திருமலைசக்கயனுக் கநு கூலா (முருகேசா)

---

ரைனஜி பலாஜிகர வொட்டியா என்றமெட்டு.

66. இராகம் - இந்துஸ்தான் தோடி ஆதிதாளம்.

பல்லவி

இன்னம் நீயென் மீதில் வன்மமேதையா

அநுபல்லவி.

உன்னதசீலா உமையருள் பாலா
உம்பர் பிரான்றனக் கருளநுகூலா (இன்னம்)
தாமதமேனோ தயையிதுதானோ
சஞ்சலங்களை யின்னஞ் - சகித்திடுவேனோ (இன்னம்)
குரவலர்த்தாமா குஞ்சரிகாமா
கொடுங்கலியனுக் கெனைக் - கொடுத்திடலாமா (இன்னம்)
செழுமறை யுருவே சிறந்தவைந் தருவே
திருமலை சக்கயன்ஸ்தோத் - திரம் செய்சற்குருவே (இன்னம்)

---

67. இராகம் - உசேனி - சாப்புதாளம்.

பல்லவி.

என்ன வன்மமோ சொல்லையா - என்மீதினில்
என்ன வன்மமோ சொல்லையா

அநுபல்லவி.

அன்னஞ் சேர் வயல்சூழும் ஆவினன் குடிவாழும்
அருளே அருளே - அருளே மறைப்பொருளே (என்ன)

சரணங்கள்.

சஞ்சலத்தால் வெம்பினேன் – சந்ததம் நீயே
தஞ்சமென்றுனை நம்பினேன்
அஞ்சலென்றென்மிடிமை – யகற்றுவா யுன்னடிமை
ஆனேன் ஆனேன் ஆனேன் எம்பெருமானே (என்ன)

பரவுமன்பனைவைதேனோ – யாருஞ்செய்யாத
பாதகங்களைச் செய்தேனோ
இரவும்பகலுந்துதி – யியற்றுமென்றன்கதி
இதுவோ இதுவோ இதுவோ இதுபொதுவோ (என்ன)

பல்வகைத்துயராலே – வேடர்வலையிற்
பட்டமானதுபோலே
வல்வினையால்வாடி – மயங்குமென்னெதிரோடி
வருவாய் வருவாய் வருவாய் அருள்தருவாய (என்ன)

கருணைகரவடிவே – அன்பர்கள்நாளுங்
கருதும்நான்மறைமுடிவே
திருமலைசக்கயன்மேல் – சித்தம்வைத்தாளும்வைவேல்
தேவா தேவா தேவா என்றன்முன்னிவா (என்ன)

68, ஸ்ரீ ராகம் – அடதாளம்.

பல்லவி.

கழுகாசலத்தில் வாழும் காங்கேயா வடியேனைக்
காத்தருள்வதெக்காலம்

அநுபல்லவி.

பழிகாரனோகொடும் – பாவியோநான்முன்
மழுமானை யேந்திய மாதேவ தனயனே (கழுகா)

சரணங்கள்.

மாயையெனுங்கொடிய வாரியிலழுந்தாமல்
தூயபங்கயப்பாத தோணிதனை யளித்து (கழுகா)

அண்டவரும் நானென்ற ஆணவந்தனை நீக்கும்
தொண்டர்களையெனக்குத் – துணையாகவேகூட்டி (கழுகா)

சைவசமயநெறி சார்ந்தார்கள்வழிபடும்
தெய்வம்நீயல்லவோ தீனதயாளனே (கழுகா)

அருமறைபணிசச்சி தானந்தரூபனே
திருமலைசக்கயன்றன் சிந்தைதனில்மேவும (கழுகா)

மரியாத காதுரா என்ற மெட்டு·

69. இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி

அடியேனையாதரி - அடியேனை

அநுபல்லவி.

வடிவேலனே - மாமயில்வாகனு
வரதாசீ தயவாயா தரி (அடியேனை)

சரணங்கள்.

பாரசிவாசல பரிபுரபாதனே
பரமதயாளா பாவவிநாசா
கோரதாரக சூரசம்மாரா
குகனே மால்மருகா ஆதரி (அடியேனை)

சிந்தாகுலமெனும் - திரைகள்மேன்மேல்வரும்
தீவினைக்கடல்தாண்ட - சீறடிப் புணையே
தந்தாள்வாய்பர - சயில சிவாஸா
தநியீதே முருகா ஆதரி (அடியேனை)

சந்ததம்திருமலை - சக்கய னிதய
தாமரைத்தவிசிற் - ருபர மாகிய
கந்தநாயகா - கடம்பணி தோளா
கதிநீயே விமலா ஆதரி (அடியேனை)

70. இராகம் - காம்போதி - அடதாளம்.

பல்லவி·

இளிப்பிள்ளைக்குச் சொன்னாற்போல் - வேணபுத்தி சொன்னாலுங்
கேளாதலைகின்றையே

அநுபல்லவி.

தெளிவுற நமையாளும் - தெய்வம் பரமனருள்
சேயே சேயே சேயே யென்மனப்பேயே (இளி)

சரணங்கள்.

வீணிலே வாணுளைப் - போக்காதேயருள் தரு
வேலனைப்பணியென - ஜெபிதேன் சகஸ்ர வுரு
நீணிலந் தனிலுள்ள மூடர்க்கெல்லாங் குரு
நீயே நீயே நீயேயென்மனப் பேயே (இனி)

விதியை மதியால் வெல்ல - லாமே மாயை யிருட்டு
விலகுவதறிவெனும் - விளக்கொளியின் பொருட்டு
நதியிற் றூண்டிற் காரன்சண் - மிதப்பிலன்றோ திருட்டு
நாயே நாயே நாயே யென்மனப் பேயே (இனி)

சீசீயென்றுனையாரு - மேசுவார்களே வேழம்
தின்னக்கூவிகொடுப் - பாரோகடல் சூழுங்
காசினி மீதினி - லெதற்கு முதவாத் தாழங்
காயே காயே காயே யென்மனப் பேயே
சந்ததந்திருமலே சக்கயன்றன் னுள்ளம்
தங்கும் சாமிநாதனைப் பணியவகலும் கள்ளம்
சுந்தரமுருகேசன் கருணை னந்த வெள்ளம்
தோயே தோயே தோயே யென் மனப் பேயே (இனி)

---

71. ஏலனே - வானிதோ - என்ற ஜாவளிமெட்டு.

பல்லவி.

ஐயனே துய்யனே - ஆறிரண்டு கையனே - முரு - கைய

அநுபல்லவி.

மெய்யடியார் - தமையாளும்
வேத - போத - நீதனே - முரு (கைய)

ஏந்திழையார் - மையல்வழி
இயங்கி முயங்கி மயங்கினேன் - முரு (கைய)

இன்ன மென்றன் - மீதுவன்மம்
ஏது வாது போதுமே முரு (கைய)

கொடியவரோ - டெந்நாளும்
கூடி - நாடி - வாடினேன் - முரு (கைய)

திருமலேசக் - கயன்றனை யாள்
தேவ தேவ தேவனே முரு (கைய)

## மங்களம்.

72. இராகம் - சுருட்டி ஆதிதாளம்.

### பல்லவி.

ஜெய சுபமங்களமே - நிரந்தரமும்
ஜெய சுபமங்களமே

### அநுபல்லவி.

கயிலையில் வாசனுக்கு - கனசசபேசனுக்கு (ஜெய)

### சரணங்கள்.

பலசமயவந்தித - பற்பல - பேதனுக்கு
மலரகித சின்மய - மலைமகள் நாதனுக்கு (ஜெய)

மூதுணர்மிருகண்ட - முனிவர் புதல்வனுக்கு
ஓது நித்தியவாழ்வை - யுதவு முதல்வனுக்கு (ஜெய)

நிகில வியாபக - நீல - கந்தரனுக்கு
சுகிர்தமன்பருக்கருள் - சோம சுந்தரனுக்கு (ஜெய)

பாவவினையகற்றும் - பழநிவாழ் புண்யனுக்கு
தேவர்சேனபதியாம் - சிவசுப்ர மண்யனுக்கு (ஜெய)

திருமலைசக்கயன்சொல் - சிவநாம கீதங்கட்கும்
மருவுபல் பொருளுடன் - மல்குசத் போதங்கட்கும். (ஜெய)

சிவநாம பஜனாமிர்தாதி கீர்த்தனங்கள்

சம்பூரணம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தனிப்பாடற்கவிகள்.

---

## ஆசிரியவிருத்தம்.

நனையார்கடுக்கைநறு மாமலரைவனைவேணி
நம்பனடிவாழ்த்தவினையாய்
நறியகுழல்மாதர்நல மேவிழைந்திட்டறிவு
நழுவவிடுவாய்தண்புனல்
புனையுவித்தன்று ளிணைக்கன்பர்மீதுபண்
புரிகிலையறங்கள்பண்ணல்
பூசனையியற்றல்வெண் பொடியணிதல்நாளுமெய்
புளகரும்பாநின்றுகண்
பனிசோரவின்பக் கடற்படிதலுந்துறப்
பாயரும்பாவினங்கள்
பகர்வாணர்சொல்லிலணு வளவுந்திரும்பாய்
பரிந்துநலமேசிறந்த
வினைசெய்கிலாய்பெரும் பாசவெந்தளைநீக்கு
மெய்ஞ்ஞானபிரணவத்தை
விரும்பாய்மனக்குரங் கேயுய்வதெந்தவிதம்
விள்வையேதிம்மடமையே.

மேற்கூறிய ஆசிரிய விதியாயமைந்த விருத்தப்பாவில் ஈற்றிலுள்ள "திம்மடமையே" எனும 6 எழுத்துக்க ளொழிய கீழ்வருமாறு வெண்பா, அறுசீர்க்கழி நெடில்விருத்தம், கலிப்பா இம் மூவினப்பாக்களும் அவ்வவற்றிற்குறிய எதுகை ஏனை மோனைகளோடு அடைமொழிகளின்றி முறையே வருதல் காண்க.

## இதன் வெண்பா.

நனையார்கடுக்கை நறுமாமலரை
வனைவேணிநம்பனடிவாழ்த்த - வினையாய்
நறியகுழல்மாதர் நலமேவிழைந்திட்
டறிவுநழுவவிடு வாய்.

### 2 - வது அறுசீர்க்கழி நெடில்விருத்தம்.

தண்புனல்புனையுகித்தன்றாளிணைக்கன்பர்மீது
பண்புரிகிலையறங்கள்பண்ணல்பூசனையியற்றல்
வெண்பொடியணிதல்நாளுமெய்புளகரும்பாலின்று
கண்பனிசோரவின்பக்கடற்படிதலுந்துறப்பாய்.

### 3 - வது கலிப்பா.

அரும்பாவினங்கள் பகர்வாணர்சொல்லி லணுவளவும்
திரும்பாய்பரிந்து நலமேசிறந்த வினைசெய்கிலாய்
பெரும்பாசவெந்தளை நீக்குமெய்ஞ்ஞான பிரணவத்தை
விரும்பாய்மனக்குரங் கேயுய்வதெந்த விதம்விள்வையே.

---

படைத்தானைத்திரிசூலப் படையானையன்பரெலாம்பணியத்தேவாய்க்
கிடைத்தானைமதியணிசெங் கிடையானைவின்மலனைக்கெழுமியெங்கும்
சடைத்தானையனைத்திலுஞ் சடையானையிதழிநறுந்தாமத்தானை
உடைத்தானைப்புலியுரியா யுடையானைமறப்பின்றிஓதுவாமால்.

### கொம்பிலா வெண்பா.

ஈசற்கிறுதியிலை யில்லார்க்குவப்பில்லை
நீசர்க்குயர்வில்லைநிச்சயமாம் - வாசப்
புலிக்குக்கனமில்லை பூரியர்க்கன்பில்லை
கவிக்குமருப்பில்லை காண்.

இதில் ''கவிக்குமருப்பில்லை'' என்றது குரங்குக்குக் கொம்பில்லை என்றுவதுடன் பாட்டில் கொம்பு அக்ஷரமில்லையென்றும பொருள்படும்.

### காசி என்றெடுத்து ராமேசுரமென முடிந்தவெண்பா சுரம்போக்கு.

காசிவனேமென்பூக் கனற்றநோந்தாள்வருந்த
எசில்மானெங்ஙனியங்குவளோ - பேசின்முன்பே
இல்லையெனுதின்றபிற கென்றபின்னரில்லையெனும்
சொல்லேலிக ராமே சுரம்.

### வெண்பா.

ஆரும்பணிய வியற்றும் அணிமுதலாய்
நேரும்வளங்கள்நிறைக்குநற்சேய்-பேருவகை
யாகவுதவும் அயலவனை நட்பாக்கும்
கோகணகமா இன்குணம்.

(இதன் விவரம்) கோ - அரசன்-ஆரும்பணிய வியற்றும், கனகம் பொன்-அணிமுதலாய் நேருமவளங்கள்நிறைக்கும், மாது-பெண்-நற்சேய் பேருவகையாகவுதவும், இன்குணம் - சதகுணம் - அயலவனை நட்பாக்கும் எனவும் பொருள்படும்.

நடுவெழுத்தலங்காரம்.

அலகைமாலூர் திவியா குலம்நாவாணி
அகம்வேயும்புல்லொன்றிற் கமைந்தநாமம்
இலகுமிவற்றிடையாம்பஞ் சாக்ஷரத்தை
எனக்களித்தான்முன்கடையக் கரமோபத்தை
நலமுறஆர்ந்தான்விடவா சுகியாற்கொண்டான்
நவில்வியாக்கிரவுரியி லுலமைத்தான்
அலமுறுசத்தியின்வடிவா யிருந்தான்றூய
ஆடகமாக்கினன்றிரியம் பகப்பிரானே.

அலகை—பசாசு
மாலூர்தி—நாகாரி
வியாகுலம்—கவலே
நாவாணி—பாரதி
புல்—சமபை

இவற்றின் நடுவெழுத்துக்கள் - முறையே-சாகாவரம், மற்றவை-பசு நாரி-கலே-பாதி-சபை.

மூன்று வெண்பா.

எனையாள்வாய்கததனே என்பாற்கருணே
யனேயேவன்புத்தன்மே லன்பைப்—புனே கயிலை
அத்தனே துன்பம் அதமாக்குந் தூயவனே
நித்தனேவன்பேன் நிதம.

புலியென்றெடுத்து கரடியெனமுடிந்தவெணபா.

புலிக்கமலிவெங்கட் பொல்லாநமனே
நலிக்கிடேலெம்முளத்துநாளும் - பொலிநதுறுமால்
காரூர்நெடுஞ்சினேய காவெமமருங்குஞ்சூழ்
ஆரூர்த்தியாக ரடி.

இக்காமத்தீயை யெழுவித்தீர்நீவிரென்றூய்
இக்காமத்தீமொழீஇயாமல்லேம் - மிக்கான
தங்கச்சிலம்புனைாற் றையலேகும்பழுனி
தங்கச்சிலம்புக்கால் தான்

தங்கு அச்சிலம்ப - பொதியமலே - கால் - காற்று.

அரியகங்காளனைக்கருதித்தவமிழைத்து
மலகில்பிரார்த்தனைகள்செய்துநோன்புநோற்றுந்
தெரியநிறைபொறையறிவுகல்விவாய்ந்த
சேய்பயப்பதவனிதனிற்சரதம்நீயோ
வுரியதமரழப்பெண்டீர்மக்களேங்க
வுயிர்கவர்தற்குயர்வாழ்வைக்கெடுத்தற்கான
கரியநமன்காரியிருவரைப்பயந்தாய்
கதிரவனேயுனைப்போல்வெய்யவன்மற்றின்றே.

தேனையென்றமதுரமென்சொற்கரியகூந்தற்
றேசுலாம்பரத்தையர்தம்மிருந்தனத்தைத்
தானைகளிலொன்றுமங்குசமென்றோதுந்
தன்மையையின்றல்லோதேர்ந்தேனம்மம்மா
மானையச்சூதாதிகெடுவழியாற்சேர்க்கு
மாநிதியாமதமிகுத்தகாமுகப்பே
ரானைகளைத்தம்வசஞ்செய்தம்மதத்தை
யறத்தணித்துப்பணிகொள்ளுந்திறத்தாலென்றே.

மூந்தாணவங்கொள்சண்டற் கிறுதிமார்க்கண்டர்க்கு முற்றுவாயுள்
தந்தாளேகம்பேசர் தந்தாளேதாள்மற்றைத் தாள்களெல்லாம்
வந்தாள்தந்தாள்மயல்கை பிடித்தாள்மானங்கெடுத்தாள் வைதாள்தீங்கு
கந்தாளென்றுரைக்குமிந்தத் தாளுமல்லாற்கேட்பைத்தாள் கம்பந்தாளே.

மேலுமேலு மின்பம்.

நிதியமென்மேலும்வளர வதைப்பதனஞ்செய்ய
நிலவறையொன்றியற்றவங்கு முன்னிழந்தவிலையில்
நேர்வயிரக்கணையாழி யெலிவளையிற்கிடப்ப
நிகழ்மணம்புத்திரப்பேறு தினமனையிலோங்க
புதியவறைகட்டுதற்காப் பெயர்த்தகற்களெல்லாம்
புகலுமரகதங்களாய்ப் பொலிதரக்காலிடறும்
புதையல்தனைத்தோண்டவோர் கோல்தேடியாங்கு
புதைந்துளவோர்கோலெடுக்கப் பத்தரைமாற்றாக
வதியும்பொற்கொழுவாகவ துவிருக்கநிதியை
மறைத்தேகவொடித்ததழை சஞ்சீவியாயவ்
வாடையால்மனையிலிறந் துளமனையாள்பிழைக்க
வஞ்சனையாய்க்கொல்லவந்த பகைவனராத்தீண்டி
விதியழிந்துமடியவவன் வைத்திருந்தபெருங்கல்
வீழ்ந்துதனைக்கடிக்கவந்த அப்பாம்புஞ்சென்னி
வெடித்திறக்கவங்காக ரத்தினமுங்கிடைக்கின்
மிகுவாழ்வுசெல்வமென்ப வேறுண்டோவம்மா.

வறியர்செல்வரைத்தமக்குச் சிலேடைகூறல்.

அணிவிதிமிக்கார்களறுசுவையொடுண்பார்யாமும்
அறுசுவையோடுண்கின்றோநகனிபழங்கறிகள்
கனிதமின்றியவர்நுகர்வர்கனிபழங்கறிகள்
கருதிநாமும்நுகர்வோம்விலைமதியாவுடைகள்
பணிகள்மேற்கொள்வரவர்விலைமதியாவுடைகள்
பணிமேற்கொள்வோம்நாமுமவர்சயனம்பூமேல்
எனில்நமதுசயனமும்பூமேலவர்க்குநமக்கும்
என்பேதமவர்செல்வர்நாம்வறியரெனலே.

இக்கவியில் வறியர்க்குரைக்கும் அறுசுவை - சுவையற்றது, கனிபழங்கறிகள் - சளித்தபழைய கறிகள், விலைமதியாவுடை - பழங்கந்தை, பணி - ஏவற்பணிவிடை, பூ - மண்.

வெறிவிலக்கு.

திருத்தகுதோளிரண் டாறுடைவேலன் செழுஞ்சிலம்பிற்
பெருத்தகொங்கைக்கனத் தால்வாடுநுண்ணிடைப் பேதையரே
வருத்தமெவர்க்குந் தவிர்த்தாள்தலைநல மாமன்மகன்
ஒருத்தன்பிழைக்க வொருத்தனைக்காய்த லுசிதமன்றே.

மாமன்மகன் ஒருத்தன் - லக்ஷ்மிகாந்தனாகிய விஷ்ணுபுத்ரனெனுமன்மதன், பிழைக்க - பிழைசெய்ய, ஒரு - ஆடு.

நாணிக்கண்புதைத்தல்.

அளிதாங்குகொன்றை மலர்கலைசேர்மதி யாடரவந்
துளியோங்குகங்கை யணியுமிறைவர் துலங்குவெற்பில்
ஒளிவேங்கைவெம்பணி சூழ்வனமேவிய ரோங்கல்கண்டோம்
வெளிதோன்றுதாரை தெரியாயல்நெஞ்சகம் வெம்பியதே..

ஒளி - பிரகாசம், வேங்கை - பொன், வெம்பணி - விரும்பத்தக்க ஆபரணம், வனம் - அழகு, ஓங்கல்- (முலையாகிய) மலை, தாரை-கண்.

பாலனைப்பழித்தல்.

தண்ணாருங்கங்கை யணிசடையார்நற் சயிலத்திடம்
பெண்ணாருறைபணி சூழ்தனக்குன்றின் பிறங்குசிரங்
கண்ணாரிராவணன் பாற்செய்ததக்கடுங் கால்மைந்தனே
எண்ணாவதுசெய் வினைச்சிறுகாலென் றியம்பலென்னே.

இடம்பெண்ணாருறை பணிசூழ்தனக்குன் றென்பது - சிவபிரானவாசஸ்தானமாகிய ஆதிசேடனால் முன்சூழப்பெற்ற பொன்மலையெனவும் ஆருதாரத்துள் அனேகமெனு மார்புஸ்தலமான ஆபரணங்கள் நெருங்கிய

மலைபோலுங் கொங்கையெனவும், கண்ணாரிராவணன்பால் என்றது பெருமையுடைய ராவணன் வாசமாகிய இலங்கையெனவும், மூங்கிற்குழலையுடைய கரியசிறவிஷ்ணுவின் தானமாகிய சுவாதிஷ்டானமெனும் அடிவயிறெனவும், சிறுகால் என்றது இளங்குழந்தை யெனவுங் கொள்க.

யமகக்கலிப்பா.

காமனம்புந்தி யெதிர்த்துநின்றாலுங் கலங்கிமயங்
காமனம்புந்தி யளித்தருள்செய்துவெங் காலனுட்கிக்
காமனம்புந்திரி நாயெனைக்காவுமை காமுறுபா
காமனம்புந்திகழ் சோமனுஞ்சேர்சடைக் கண்ணுதலே.

மாசுணங்கைக்கொண்ட கொங்கைமின்னார்கள்மயல்கொடுசும
மாசுணங்கைக்கடுப் பத்திரியாதுன்ப வங்களற
மாசுணங்கைப்பசுங் கூழ்செழிக்கப்பெய்தன் மானவருள்
மாசுணங்கைக்கணி முக்கட்பிரானை வணங்குநெஞ்சே.

வாகனம்பெற்ற மெனக்கொண்டநம்பக வாமதன
வாகனம்பெற்ற விழிக்கனலாற்சுட்ட வாவிறைய
வாகனம்பெற்ற துயர்தீரொன்றேதன் மலைமகள்வி
வாகனம்பெற்றுய வாய்வந்துகாக்குநன் மந்திரமே.

கரமுண்டகந்தர நம்பெருமான்கழல் காணவஞ்சக்
கரமுண்டகந்தர மாக்குநெஞ்சேபொய் கழறிலன்ம
கரமுண்டகந்தர வந்தபுத்தேட்குப்பொய் யாய்க்கரிப
கரமுண்டகந்தரங் கத்துரும்பொத்ததைக் கண்டபின்னே.

## கல்வியின் அருமையறியாமை.

### ஆசரிய விருத்தம்.

மதுரைதனைமறுதையென்றெழுதுகினுமியாதேனும்
வரையுமொருகாகிதத்தை
மடக்கியொருகையிற் பிடித்துயர்பிளீடர்போல்
மருவுமற்பக்களவையும்
புதுமையாய்க்கட்டிட நுழைந்தகுற்றம்மெனப்
புதியவெட்டாவதாக்கிற்
பொருந்துநூற்றெழுபத்து மூன்றதாம்பிரிவிலுள
போலீஸ்பாபத்துகாண்
இதுவெனமிரட்டியே காலணாமுதலாக
யாசிக்குமவர்கள்வரிலோ
எங்குபோகின்றீர்கள் வாருங்களிப்படி
யிருங்களென்றுபசரிப்பார்

சதுரானகவிகளைக் கற்பனுமதுரமொடு
சாற்றுகவிராஜனெனிலோ
தலைமைக்குரங்கென்ன வவமதிப்பார்களிது
தற்காலவியல்பதாமே.

கடலையும்மடையொடு குளத்தையும்நீரினெடு
கணமதனிலுண்டுவிடுவோங்
கவினுறுமரம்பைநம் வாயில்தனில்நாட்டியங்
காட்டிவிற்கச்செய்குவோங்
திடமிகும்வானவனை யசையாதுநின்றிடச்
செய்குவோம்சொர்க்கமதனைச்
செங்கையிலடக்கியா டகலோகமதையுமோர்
செப்பினிலடைத்துவைப்போம்
அடர்கானகங்களைக் கைநகத்தாலே
யறக்கிள்ளுவோங்கழுதையே
ஆகாயமீதிற் பறக்கவைப்போம்வேங்கை
யதனிலும்பால்கொள்ளுவோம்
சுடர்செய்வெண்சோமனை யமாவாசைநாளிற்
றுலங்கவேகாட்டுவோம்யாம்
சொல்லிடுங்காலறிவில் நம்மையொப்பாரொருவர்
தொல்லுலகிலிலைநெஞ்சமே.

இ - ள். கடலை - ஓர்பயறு, மடை - சோறு, குளம் - வெல்லம், அர
ம்பை - வாழை, நாட்டி - நட்டு, அம் - அழகு, வானவனை - பெருமையு
டைய அம்மலை, சொர்க்கம் - தனம், ஆடகலோகம் - பஞ்சலோகத்துளொ
ன்றான பொன், கானகம் - கால்நகம், கழுது - வண்டு, வேங்கை - ஓர்மரம்,
சோமன் - வஸ்திரம், அறிவில் - அறிவில்லாத.

பேளையூர் அவதானம் - பொ. மீனாக்ஷிசுந்தரக்

கவிராயர் மீதியற்றியது.

குலவுவெள்ளாடிரண்டுமுட்டையிடவுமியான்கண்டேன்
கோழிதனிலொருகுடம்பால்கறந்திடவுங்கண்டேன்
நலமுறுபாகற்செடியிற்கனமாங்காய்கண்டேன்
நாரிகளைப்பனைமருவியணைந்திடவுங்கண்டேன்
சொலவெருதொன்றொருபசுவைவிழுங்கவுமேகண்டேன்
தொடர்வேங்கையும்மாடுமொன்றாகக்கண்டேன்
அலமுறுசீர்மீனாக்ஷிசுந்தரநாவலன்செய்
யங்கனங்களைக்கவிப்பவனியிற்கண்டிலனே.

இ - ள். முட்டை - முட்டுந்தன்மையை, கோழி - உறையூர், ஒரு - ஆடு, குடம் - பசு, பாகல் - பலா, கனமாம் - பாரமாகிய, நாரி - பன்றுடை, அப்பனை - அந்தப்பனை, வை - வைக்கோல், வேங்கை மாடு - இவ்விரண்டும்பொன்.

நிரோஷ்டகக்கலிப்பா.

செங்காலனசித் திலஞ்செறிதண்செய் திகழ்தணிகை
தங்காறிரண்டங்கை யானேசிறந்த சடாக்ஷரனே
கங்காதரன்றந்த சந்ததியேஜகத் காரணனே
அங்காசினியி லெனையாளநீயல தாரையனே.

நிரோஷ்டகக்கொம்பிலாவெண்பா.

சங்கரகங்கா தரகயிலைநாயகா
திங்களணிசீர்திகழ்சடில - கங்கரா
தீதகலநீக்கிச்சிறியனையாள் தில்லை
நாதநீயிந்நாள்நன் றாள்.

விடுகதைக்கவிகள்.

தாரணிமன்னவர்முதல்யாவரும்வணங்கித்
தனக்குக்கீழ்ப்படிந்துநடந்திடவேசெய்யுஞ்
சீரமையுங்காலிரண்டும்பூமேல்நிற்குந்
தினமுமதனிடம்பலபேர்வருவர்போவர்
பாரதனில்வணங்காதார்தமைத்தண்டிக்கும்
பக்கமதிற்படைகள்மென்மேற்செறிந்திருக்கும்
நீரமையுங்கடற்புவியீரிக்கதைக்கு
நிலையாகும்பொருளறிந்துநிகழ்த்துவீரே.

(இ - ள்.) வீடுகட்கிடும்நிலை-கவியில்பகிரங்கமாய்க் கூறியுளது, பூ - பூமி, பக்கமதிற்படை பக்கம் மதிற் படை.

தலைசெவிகண்மூக்குவாய்தொனியுமுண்டு
தகவுடையகால்நான்குவாலுமுண்டு
நிலைமையாய்நின்றவிடம்நின்றிடாது
நிலமீதிலொருக்கணித்துப்படுத்துக்கொள்ளும்
இலையிலுளைசிடுக்குகைக்குள்ளொடுங்கும்புந்தி
சேர்குருவையடுத்திருக்குங்குலமதாகும்
மலைநிகர்தோள்வலியமைசங்கிராமபூமா
மதனரூபாபொருள்நீவழங்குவாயே.

(இ - ள்.) ரூபா என்று கவியில் வெளிப்படையாய்க் கூறியுளது, கால் நான்கு - சில்லறை நாணயம், வால் - வெண்மை, சிலை - உரைகல் - குகை உருக்குங்கருவி, புந்தி - புதன், சேர்குரு - வியாழம் அடுத்தது வெள்ளி.

பூவிலோர்வகையன்னதிரள்மிகச்சேர்ந்திருக்கும்
புனிதமாலாயுதத்தின்பேரிலதுவளரு
மேவியதோர்பருவத்திலறுப்புண்ணுமிருகால்
மிதியடியுற்றிமொதர்முடிமீதுமிருக்கும்
தாவில்நவக்கிரகஞ்சேர்ந்திருக்குமிற்குமோடும்
தாஜென்றுபத்துநூறுய்ப்பலவாய்ப்பிரியும்
பாவிலேசிறந்துணர்ந்ததேனேமானேசற்
பாத்திரமேயிக்கதையின்பயனுரைசெய்வாயே.

இ - ள். கவியிற்கூறியபடி - பாத்திரம். பூ - மண், அன்னம் - சாதம், மாலாயுதத்தின்பேர - சக்கரம், மிதியடி - மிதித்தல் அடித்தல், நவக்கிரகம் - புதுமையாகிய வீடு, ஓடு - உடைந்ததுணிக்கை.

விரிகாதொன்றிருமுடியாம்மூன்றுகாலாம்
மேதக்கநாலுகையாமசிறமஞ்சாகுந்
திரிதானமாறுகுமெழுதிரேகந்
தெரிந்திடவேகொம்பெட்டுநவமாய்த்தோன்றும்
சரியாகசிதம்பத்துக்கன்றையீனும்
தண்சிலம்புக்காலுறும்வாலில்லேதோலாய்ப்
பரிவாயுலாவுமிந்தப்பிராணிதன்னைப்
பார்த்தவர்கள்கேட்டவர்கள்பகருவீரே.

இ - ள். யானை. ஒன்றுதல் - பொருந்துதல், இரு - பெரிய, மூன்று மகரவொற்றுநீக்க ஊன்று, நாலுதல் - தொங்குதல், சிறமஞ்சு - சிறம்மஞ்சு (மேகம்) திரிதானம் - மும்மதம், ஆறு - நதி, எழு - உயர்ந்த, கொம்பு - மரக்கிளை, நவம் - புதுமை, சிதம்பம - அல்தல், சிலம்புக்கால் - மலையிடம், வால் - வெண்மை, தோல் - யானை.

ஆடெடுப்பானெடுங்காலஞ்சிறையிருப்பான்
அமைவுறுகைவிலங்குசேரடவிவாசன்
நீடெழில்சேர்தோகையார்விருயபுமரூபன்
நிகழ்ந்திடுமைப்பணங்கவர்வான்வெறித்தசொல்லான்
ஓடெடுப்பான்சேயதனைத்தான்றாக்கிக்கொண்
டோடுவன்பேதையர்க்கொப்பாமிவனியற்கை
பீடெதுவுமில்லாதகுணம்வாய்ந்த
இளங்குயிலேமடமயிலேபொருள்சொல்வாயே.

இ - ள். மயில். ஆடு - நடனம், நெடுங்கால் - நீண்டகால், அஞ்சிறை - அம்மியசிறகு, கைவிலங்கு - யானை, தோகையார் - வால்பொருந்திய, மைப்

பணம் - படமுடைய பாம்பு, ஒடெடுப்பான்சேய் - சுப்பிரமணியர், பேதையர் - பெண்கள்.

பூவமரம்பஞ்சுடையான்றையலார்மேலே
பொருந்திடுமாசுகமேவிநலம்புணரச்செய்வான்
ஆவல்தருமதனைநூல்தோய்ந்திடுமுள்ளத்தான்
அமைசோமனைக்கவிகையாக்கொண்டோன்தேவ
தேவசிவன்படைக்குமஞ்சான்மலிதருமெத்துடையான்
செய்யுமெத்தையறிவாய்நீயிவன்மாரனல்ல
காவமர்நீள்புவியிலுறையறிவுடையீரிந்தக்
கதைக்குரியபொருளுணர்ந்துகழறவீர்நீரே.

இக்கவியின் வெளிப்படைக்கருத்து மன்மதனைக் குறித்திருக்கின்றது. (இ - ள்.) கவியிற்கூறியபடி மெத்தை. பூ - அழகு, அம் - அசை, பஞ்சு - இலவம்பஞ்சு, தையலார்மேல் - தைக்கப்பட்டமேற்பாக முடையது, மாசுகமேவி - பெருமிதசுகமுற்று, அதனம் - மிகுதி, சோமன் - வஸ்திரம், கவிகை - கவியப்பெற்றது, படைக்கும் - கற்பிக்கும், அம் - அழகு, சான்மலி - இலவு, மெத்து - மிருது, மெத்தை - கவியின்பொருள்.

ஆயபூவிசிற்பெரிதாந் தகவிலங்கும்வாசமுறுஞ் சூழுநற்றேன்
சேயமைமாலையமதாங் கனமிகும்பார்ப்பார்க்ககலத் தெரியலாகும்
ஆயவிதையம்புயமொத் துளதென்பரம்புயம தல்லவாதி
நாயகன்றனல்லருளால் வளமோங்குதிருமலையா நவில்கவின்றே.

இ - ள். மலை. பூ - பூமி, விலங்கு-மிருகம், சேயமை-உயர்ந்தமூங்கில், பார்ப்பார்-பார்ப்பவர், அகல-விசாலமாக, அம்புயம்-அழகியதோள், திருமலை-கவியின்பொருள், இதன் வெளிப்படை-தாமரைமலரைக்குறித்துளது.

எழுத்துநான்காம்பெயர்பலகலைக்குமூல
மிரண்டாவதெழுத்தொழிந்தாலன்பின்பேராம்
வழுத்துமூன்றாவதெழுத்தொழியவெய்யோன்
வருமுதலுங்கடையுமாமெழுத்தூர்ப்பேராஞ்
செழித்தநான்காவதெழுத்துடனிரண்டாந்
திகழெழுத்துஞ்சேர்ந்திடிலோசெல்வத்தின்பேர்
அழுத்தமொடுகாண்பருத்திமிக்கார்சொல்க
வலையெறியுங்கடலாடையவனிமீதே.

இ - ள். பருத்தி. பல்கலை - பலவஸ்திரம், பருத்தி - என்பதில், 2ம் எழுத்தாகிய - ரு - நீங்க, பத்தி - அன்பு, 3-ம் எழுத்தாகிய - த் - நீங்க பரிதி - சூரியன், முதலெழுத்தாகிய பகரமும் கடையெழுத்தாகிய - திகரமும்சேர, பதி - ஊர், 4-ம் எழுத்தாகிய - தி - 2-ம் எழுத்தாகிய ரு - இவ்விரண்டுஞ்சேர, திரு - செல்வம், கவியிலும் பொருள்கூறியுளது.

சம்பூரணம்.